399

# ஜகன்மோகினி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS
399

அ 2 அணா
அக். '42

வை. மு. கோதைநாயகி அம்மாள்

# ஜெமினி நந்தனார்

படத்திலுள்ள பாட்டுக்களில் மிகவும் நன்றாயுள்ள மூன்று பாட்டுக்களைத் தெரிவித்து



## ரூ 10000 லாபம் பெறுங்கள்

**2-வது வாரம்**

| | | |
|---|---|---|
| சென்னை | — | வெலிங்டன் |
| மதுரை | — | நியூ ஸினிமா |
| பெங்களூர் | — | ஸுப்பர் டாக்கீஸ் |
| கோயமுத்தூர் | — | ராஜா டாக்கீஸ் |
| காரைக்குடி | — | ராம விலாஸம் தியேட்டர் |
| திருநெல்வேலி | — | பாலஸ் டி வேல்ஸ் |
| சேலம் | — | நியூ ஸினிமா |
| கும்பகோணம் | — | டைமண்ட் ஸினிமா |
| திருப்பாப்புலியூர் | | நியூ ஸினிமா |

**1942ன் உன்னத சங்கீதப் படம்**

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

**ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்**

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்.

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -ஸ்ரீ. வீரராகவ கவி.


| மலர் 19 | சித்ரபானு௵ புரட்டாசி௴ அக்டோபர் 1942 | இதழ் 10 |
| --- | --- | --- |





பி.ஸ்ரீ

## (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

### 5. அழகு வளரும் தொட்டில்

குழந்தைக் கிருஷ்ணன் வளர்ந்த தொட்டிலை 'அழகு வளரும் தொட்டில்' என்று சொல்லலாம். அப்படி அழகு என்பதும் தத்துவம்தானே கிருஷ்ணனாக வந்து வளர்ந்தது! ஆம், ஒருவசப் படாமல் சுயேச்சையாக—சுதந்திரமாக.

அந்தத் தொட்டிலைப் பெரியாழ்வார் ஒரு சமயம் ஓர் அழகான துணித் தொட்டில் அல்லது தூளியாகக் காட்டுகிறார். ஒரு சமயம் அந்த அழகு வளரும் தொட்டிலை,

மாணிக்கம் கட்டி, வயிரம் இடைகட்டி,
ஆணிப்பொன் னால்செய்த வண்ணச் சிறுதொட்டில்

[இடை-இடையே; நடுவில். ஆணிப்பொன்-மாற்று உயர்ந்த பொன்.]

என்று காட்டுகிறார். காட்டித் தாமே அந்தத் தொட்டிலுக்குப் பக்கத்தில் தாயாக நின்று தாலாட்டுகிறார்.

குழந்தை அழத் தொடங்குகிறது. உடனே யசோதை,

18072

உடையாய்! அழேல், அழேல்: தாலேலோ
உலகம் அளந்தானே! தாலேலோ.

[உடையாய்-ஸ்வாமியே. அழேல்-அழாதே.]

என்று தாலாட்டுகிறாள்.

பிள்ளையைத் தொட்டிலில் கண் வளர்த்தித் தாலாட்டும்போதே ஆழ்வாராகிய யசோதைக்குத் தெரிந்துவிடுகிறது,—"இந்தப் பிள்ளை சாதாரணக் குழந்தையல்ல; தெய்வப் பிறவிதான்" என்பதும். அத னால்தான் "அப்பா! அழாதே; அம்மா! அழாதே" என்று தாலாட் டாமல், "உடையாய்! அழாதே" என்றும், "உலகம் அளந்தானே! அழாதே" என்றும் தாலாட்டுகிறாள்.

## தாயுள்ளமும் பக்தியுள்ளமும்

குழந்தையை ஆய்ச்சிமாரும் ஆயர்களும் வந்து பார்த்து இயன்ற அளவு பணி செய்தும், பரிசளித்தும் மகிழ்ந்து போவார்களல்லவா? ஆனால் குழந்தைக் கண்ணனைப் பெருமாளாகப் பார்க்கும் இந்த (ஆழ்வார்-யசோதையின்) கண்களுக்கோ, அவர்களெல்லாம் பிரமன் முதலான தேவர்களாகிவிடுகிறார்கள்!

மாணிக்கமும் வயிரமும் இழைத்த இந்தத் தங்கத்தொட்டிலே இந்த லோகத்துத் தட்டான் செய்ததன்று; நான்முகத் தட்டான் (பிரமன்) அந்த லோகத்திலிருந்தே செய்துவிட்டது. அரைவடம் முதலியவற்றையோ ஸாக்ஷாத் சிவபெருமானே அன்பு கூர்ந்து அனுப்பியிருக்கிறாராம்.

"அதோ தேவேந்திரனும் ஓர் ஆபரணம் தந்து நிற்கிறான்!" என்று சொல்லித் தாலாட்டுகிறாள் தாய்:

"எந்தம் பிரானார் எழில் திருமார்வர்க்கு,
சந்தம் அழகிய தாமரைத் தாளர்க்கு,
இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி
தந்(து)உவனாய் நின்றான்: தாலேலோ;
தாமரைக் கண்ணனே! தாலேலோ"

[எந்தம் பிரானார்-எமது ஸ்வாமி. எழில்-அழகு. மார்வர்-மார்பையுடையவர். சந்தம்-(இங்கே) நிறம். தாளர்-திருவடிகளையுடையவர். எழிலுடை-அழகையுடைய. உவன்-அதிக தூரத்திலும் அதிக சமீபத்திலும் இல்லாமல், நடுத்தரமான தூரத்தில் இருப்பவன்.]

தாலாட்டும்போதே குழந்தையின் அவயவ சௌந்தரியங்களில் அடிக்கடி ஈடுபடும் தாய், "என்ன அழகான மார்பு! தாமரைப் பூவைப் போலிருக்கும் அந்த அடிகளின் மென்மை ஒருபுறமிருக்க, அந்த நிறங்கூட அப்படியே மலர்ந்த செந்தாமரைபோலிருக்கிறதே!" என்றெல்லாம் பூரித்துப்போகிறாள்.

தாயுள்ளம் இப்படியெல்லாம் பூரிக்க, பக்தியுள்ளமும் "இக் குழந்தையல்லவா எமது ஸ்வாமி?" என்று பூரித்துப்போகிறது; "எமது குழந்தைப் பெருமாளுக்குத் தேவராஜாவே 'கிண் கிண்' என்று ஒலிக்கும் அரைச்சதங்கை கொண்டு தருகிறான்!" என்றும் ஆனந்தம் அடைகிறது.

இந்தத் தாயுள்ளமும் பக்தியுள்ளமும் இந்த நிலையில் இருக்க, அந்த இந்திரனுடைய நிலையைத்தான் என்னென்பது? குழந்தையைக் கண்குளிரப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஒருபுறம்; "குழந்தையானாலும் பெருமாளல்லவா?" என்ற மரியாதை ஒரு புறம்: எனவே அதிக தூரத்திலும் போகாமல், அதிக சமீபத்திலும் வந்துவிடாமல், நடுவிலே நின்று நின்று உற்றுஉற்றுப் பார்க்கிறானும்.

## தேவர்களும் தேவாதி தேவனும்

பல வேறு தேவர்களும் பலவேறு ஆபரணங்கள் அனுப்பியிருக்கிறார்களாம். தேவ சம்பத்திலும் குபேர சம்பத்து விசேஷமல்லவா? அந்த முதலாளியே, "இந்த அழகான மார்புக்கு இந்த முத்து வடம் முதலானவைதான் பொருத்தமானவை!" என்று அவற்றைக் கொணர்ந்து சமர்ப்பித்துத் தொழுது நிற்கிறானும்.

இன்னும் கடலில் கிடைக்கும் விசேஷ நன் முத்துக்களால் ஓர் ஆரமும், ஜாதிப் பவளத்தால் ஒரு வடமும், சங்கு வளைகளும், கடலின் ராஜாவான வருணனே அனுப்பியிருக்கிறானும்.

"ஓதக் கடலில் ஒளிமுத்தின் ஆரமும்,
சாதிப் பவளமும், சந்தச் சரிவளையும்,
'மாதக்க!' என்று வருணன் விடுதந்தான்:
சோதிச் சுடர்முடியாய்! தாலேலோ; சுந்தரத் தோளனே! தாலேலோ'

[ஓதக்கடல்-அலைவீசும் கடல். சாதிப்பவளம்-சிறந்தபவளம். சந்தம்-அழகு. சரிவளை-முன்கை வளைகளும் தோள்வளைகளும். மா-சிறந்த. தக்க-தகுதியான. விடுதந்தான்-அனுப்பினான். சோதி-ஜோதி. முடியாய்-கிரீடத்தை அணிந்தவனே.]

என்று தாலாட்டுகிறாள்.

குழந்தையின் முக ஜோதியும் சுடர்களுமே ஒரு ஜோதி மயமான கிரீடம்போலத் தோன்றுகின்றனவாம். ராஜாதி ராஜனும் தேவாதிதேவனுமாகிய குழந்தையல்லவா? கண்ணைப் பறிக்கும் அழகுவாய்ந்த அந்த ஜோதிச் சுடர்முடி அகிலலோக ஆட்சிக்கும் மாட்சிக்கும் அறிகுறி. அந்த முடியழகிலிருந்து கண்களைப் பறித்துக் கொள்ளமுடியுமா? முடியுமானால், பிறகு "ஸர்வ சக்தியின் அறிகுறியான இந்தச் சுந்தரத் தோள்களையே பார்த்துக்கொண்டிருக்கலாம்; இந்தச் சாந்தமான தோளழகிலிருந்து கண்களைப் பறித்துக் கொள்ளவேமுடியாது!" என்று தோன்றுகிறது.

## காதற் பரிசுகள்

மகா லட்சுமியும் பரிசுகள் அனுப்பியிருக்கிறாளாம் இந்தக் குழந்தைக் காதலனுக்கு. அவள் செந்தாமரைப் பூவையே தன் இயற்கைப் பொற்கோவிலாகக்கொண்டு கொலுவிருக்கும் அழகு-ராணியல்லவா? எனவே, பொன்னாலும் இரத்தினங்களாலும் செய்த ஆபரணங்களுக்கு மாறாகத் துளசி மாலையும் பூமாலையும் அனுப்பியிருக்கிறாள்!

அந்த மாலைகளைப் பொன்னாபரணங்களுக்கும் இரத்தினாபரணங்களுக்கும் மேலானவை என்று மதிக்கிறது தாயுள்ளம். அந்தத் துளசிமாலையைப் பார்த்துப் பார்த்து அந்த மனோஹரமான வாசனையில் ஈடுபட்டு, "காட்டிலுள்ள பரிமளம் மிக்க துளசியைத் தேர்ந்தெடுத்து இந்த மாலை எவ்வளவு அழகாய்த் தொடுக்கப்பட்டிருக்கிறது!" என்று மகிழ்ச்சியடைகிறாள். "அந்தப் பூமாலையோ இன்னும் அதிசய அழகுவாய்ந்தது. இந்தப் பூக்கள் இந்த உலகத்திலுள்ள எந்தக் காட்டில் தேடினாலும் கிடைக்காத அபூர்வமான பூக்கள்! வானுலகமாகிய சொர்க்கலோகத்திலே காடுகாடாய்ச் செழித்துத் தழைத்திருக்கிறது என்கிறார்களே, அந்தக் கற்பகச் சோலையிலிருந்து பறித்த பூக்களால் தொடுத்த மாலை இது!" என்றெல்லாம் மகிழ்ந்துபோகிறாள்.

குழந்தைக் கண்ணனோ அழுதுகொண்டேயிருக்கிறான். "இப்படிப்பட்ட மாலைகளை அழகனாகிய உனக்குத்தான் அம்மா! அழகுத் தெய்வமே ஆசைப்பட்டு அனுப்பியிருக்கிறது. அழாதே, அழாதே; தூங்கு, தூங்கு" என்று தாலாட்டுகிறாள் தாய்.

செல்வத்தின் அதிதேவதையான மகா லட்சுமியைப்போல் பூமி தேவியும் பரிசுகள் அனுப்பியிருக்கிறாளாம். சக்திக்கும் கொடுமைக்கும் அறிகுறியான துர்க்காதேவியும் கண்ணுக்கு மைகொண்டு வந்து காத்திருக்கிறாளாம்; நெற்றிக்குச் சிந்தூரம் கொண்டுவந்திருக்கிறாளாம்; மேனியில் பூசிக்கொள்ள வாசனைப்பொடி கொண்டுவந்திருக்கிறாளாம். ஆகவே,

"ஐயா! அழேல், அழேல்; தாலேலோ"

என்று அருமையாக கொஞ்சிக் கொஞ்சித் தாலாட்டுகிறாள்.

கண்ணனைத் தொட்டிலில் கண் வளர்த்தி அந்தத் தொட்டிலுக்குப் பக்கத்தில் தாமே யசோதையாக நின்று தாலாட்டிக்கொண்டே பெரியாழ்வார் பாடிய இந்த அருமையான தாலாட்டுப் பாடல்கள், ஸ்ரீவைஷ்ணவர்களின் தமிழ் வேதமாகிய திவ்யப் பிரபந்தத்திலே திவ்யமான ஒரு ஸ்தானம் பெற்றிருக்கின்றன. இவை பக்தர்களுக்கு ஓர் அருமையான பக்தி-விருந்தாயிருப்பதோடு, ரஸிகர்களுக்கும் ஒரு தமிழ் விருந்து.

ஜகன்மோகன மூர்த்தியான கண்ணனை இந்தியாவின் கண் என்றும், ஆத்மா என்றும் சொல்லலாம். இந்தக் கண்ணன் வளர்ந்த நமது தாய்நாடாகிய இந்தியா தேசத்தையும் 'அழகு வளரும் தொட்டில்' என்று சொல்லலாம்.

சுந்தரம் வளரும் தொட்டிலில் சுதந்திரமும் வளரவேண்டியதுதான்—முன்னிலும் பெருமையாக—முன்னிலும் அழகாக! சுதந்திரத்தில்தானே சுந்தரம் அல்லது அழகும் பரிபூர்ணமாக வளரமுடியும்?



# நந்தனார்

OFFICE OF ... AR OF B...
20 FEB 1943

பொறுக்குமணிகளாக நடிகர்களைச் சேர்த்து வெகு திறமையுடன் இப்படத்தைப் பிடித்திருப்பது பாராட்டற்குரியதாகும். வேதியராக வரும் சாமாவின் நடிப்பு மிகவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாயும் பொருத்தமானதாயும் உணர்ச்சி ததும்பும் முறையிலும் அமைந்திருக்கிறது. அவருக்கு அதிகமாகப் பாட்டுக்களை கொடுக்கவில்லை. கொடுத்திருக்கும் சில, அழகாக அமைந்திருப்பினும், பழய நந்தனார் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள சில முக்யமான பாட்டுக்களை அவருக்குக் கொடுக்காதிருப்பது ஒரு சிறு குறையாகவே இருக்கிறது. நந்தனை மிரட்டிக் கோபிக்கும் சமயம், "நந்தா! உனக்கிந்த மதிவந்த...மாடுதின்னும் புலையா...முதலிய பாட்டுக்களைப் பாடியிருந்தால் மிகவும் ரஸமாக இருந்திருக்கும்.

சம்புவாக நடிக்கும் நாராயணராவின் நடிப்பு முதல்தரம்...ஆனால் சேரிப் பெண்ணுடன் வயலில் அவருக்குக் கொடுத்திருக்கும் சம்பாஷணையையும் அந்தக் காக்ஷியையும் வெட்டிவிட்டால் நன்றாக இருக்கும்.

நந்தனாக நடிக்கும் தண்டபாணி தேசிகரின் பாட்டும் நடிப்பும் அற்புதமாகவிருக்கின்றன. எனினும் அவரும் நந்தனார் சரித்திரத்திலுள்ள பழய பாட்டுக்களை அதே மெட்டில் பாடியிருந்தால் வெகு அழகாக இருந்திருக்கும். குறிப்பாக, "வழி மறைத்திருக்கிறதே" என்ற பாட்டு நாட்டைக்குறஞ்சி ராகத்தில் அமைவதேபோல் வேறெந்த ராகத்திலும் அமையவில்லை. அதே போல், "உத்தாரந்தாருமையே! கண்டாமணியாடுது, எல்லோரும் வாருங்கள்...முதலியன போன்ற பாட்டுக்கள் அந்த பழய ராகத்தில் அமைந்துள்ள அளவு இப்புதிய ராகங்களில் காணவில்லை. தேசிகரின் அருமையான பாணியில் பழய ராகத்தில் பாடியிருந்தால் இன்னும் அபாரமாக பிரகாசித்திருக்கும்.

17000 அடி நீளம் மிகவும் அதிகமாகவே இருக்கிறது. சேரியின் காட்சி அளவுக்கு மீறியதாகவே வருகிறது. திரும்பத் திரும்பக் குடிப்பதும் கூத்தடிப்பதுமாக இருப்பதை சிறிது குறைக்கலாம். சேரியில் கூட்டம்போடுதல், பூசை போடுதல், கரகம் ஆடுதல், வள்ளுவரின் பூசாரிபாகம் முதலியவைகள் தத்ரூபமாக அமைந்திருக்கின்றன...புதிய நாட்டாண்மைக்காரனும் ஒரு சேரிப் பெண்ணும் வயலில் சம்பாஷிக்கும் ஆபாஸக் காக்ஷியை அடியோடு வெட்டிவிடுவதால் படத்திற்கு அழகு குறையவே குறையாது. விவாகமாகிய வள்ளுவரின் மனைவியுடன் ஒவ்வாத வார்த்தைகளாடும் ஆபாஸக் காக்ஷியை ஜெமினி ரிலீஸில், முருகதாஸருடைய டைரெக்ஷனில் எதிர்பார்க்கவே இல்லை. சேரியின் காக்ஷிகளில் அதிகம் கொடுத்திருப்பதைவிட வேதியரின் வீட்டில் இன்னும் சில காக்ஷிகளை தத்ரூபமாகக் காட்டியிருக்கலாம்.

முதல் பாதியைவிட இரண்டாம் பாதியில் தேசிகரின் நடிப்பு வெகு உணர்ச்சியுடனிருக்கிறது. வேதியரும் நந்தனாரும் வயலில் கூடும் காக்ஷி அற்புதமாயிருக்கிறது. அந்த இடத்தில், "நந்தா! நீ சிவபக்தன்" என்ற பாட்டு இருந்தால் மிகவும் நன்றாயிருக்கும்...முக்யமாகக் குறிப்பிட்டு

வெகு அபூர்வமாக அமைந்திருக்கிறது என்று கூறுவதற்கு பாட்டுக்கள் அமையவில்லை. நந்தனார் முதல் முதல் காக்ஷியில் தோன்றும்போது பாடும் பாட்டு, நெல்கதிரைக் கையில் வைத்துக்கொண்டு புன்னாகவராளியில் பாடும் பாட்டு! கடைசியில் ,'ஐயேமெத்தகடினம்'' என்ற பாட்டை ராகமாலிகை யாகப் பாடுவது இவைகள்தான் உணர்ச்சியுடனும் இனிமையாயும் இருக் கின்றன. மொத்தத்தில் படம் சிறந்த படங்களில் ஒன்று என்பதற்கு ஐயமில்லை. எல்லோரும் கண்டு இன்பமடையக் கூடிய படமாகும்.

வை. மு. கோ.

---

# குகப்ரியை புரட்டாசியின் புனிதத்தன்மை

புரட்டாசி மாதம் என்ற உடனே நம் கண்முன்னே தோன்றும் காட்சிகள் எவை? நவராத்திரியும், திருவேங்கடமும்தான். புரட்டாசி சனிக்கிழமையும், அதன் பெருமையும், பொன்னிறஆடையுடுத்து'கோவிந்தா! கோவிந்தா!''என்று பக்திப் பரவசராய் வீதிகளிலே செல்லும் பக்தர்களின் ஆரவாரமும்'நம் கண்முன்னே தோன்றி நம்மையும் ஒரு கணநேரம் எம் பெருமானது புகழைப் பாடவும், நினைக்கவும் செய்கிறது. திருப்பதி என்ற பெயர், பொதுவாக சிறந்த தலம் என்ற பெயரைக் குறித்தாலும், திருப்பதி என்றவுடன் ஏழுமலையானின் நினைவுதான் வருகிறது. இந்தப் புனிதமான யாத்திரையைப்பற்றிப் படித்துக்கொண்டே வரும் வாசகர்களுக்கு மேலும் மேலும் விவரிப்பது அனாவசியம். ஆகவே, திருமலையின் பெருமையை நிறுத்தி, மற்றைய விசேஷங்களைச் சொல்வதே பொருந்தும்.

புரட்டாசி பிறக்குமுன்பே குழந்தைகள் மனதில் உற்சாகம். கடை களிலே ஏராளமான பொம்மைகள் விற்பனைக்காக வந்து குவியும். "அடீ, அந்த கிருஷ்ண பொம்மைதான் என்ன அழகு! அதை வாங்கி மேல் படியிலே வைக்கவேண்டும்'' என்று சொல்லும் ஒரு குழந்தை. ராஜாராணி பொம்மை, போலீஸ்காரன் பொம்மை, இவைகள்தான் வேண்டுமென்று அழும் வேறொன்று. வாங்குவதிலே ஏற்படும் ஆனந்தம் குழந்தைகளுக்கு, அவைகளை ஒழுங்கு செய்து படி கட்டி, அழகு பெற அமைத்துப் பார்த்துப் பார்த்துப் பூரிப்பர் தாய்மார்கள். குழந்தைகளுக்கு எந்தெந்தக் கிழமை களில் என்னென்ன வேஷம் போடலாம் என்று திட்டமிடுவார்கள் தமக் கைகளும் மதனிகளும். பாட்டியின் பங்குமட்டும் குறைவா? ஒன்பது நாளும் என்னென்ன பக்ஷணங்கள், சுண்டல், என்றெல்லாம் ஆராய்ந்து திட்டம் போடுவார்கள். பணத்தைக் கூசாமல் கொடுப்பதைத்தவிர புருஷர் களுக்கு வேறென்ன வேலை? சலவுகளுக்கு அபராத காணிக்கையாக, இரவில் சாப்பாடு போட்டபொழுது சாப்பிடவேண்டியதுதான். நாம்தான் வீடுவிடாய் ஏறி இறங்கி கோயிலுக்குப்போய் இவ்வளவும் செய்கிறோமே, புருஷர்கள் இவ்வளவுகூடத் தியாகம் செய்யக்கூடாதா?

இதற்கெல்லாம் மேலாக, நவராத்திரி தொடங்கி தீபாவளிவரையில், நம்முடைய விமரிசனங்கள், கொலுவைப்பற்றி, புடவை, ரவிக்கைகள், வேஷங்கள், இவைகளையெல்லாம் கேட்கிறார்களே. அந்த ஆனந்தம் வேறு! "பொம்மைக்கொலு பட்சணம்! வீட்டைப் பார்த்தால் லட்சணம்!'' என்ற

கூச்சல்! நவராத்திரி, நமது தமிழ்நாட்டில் மட்டுமல்ல. பாரத தேசம் முழுவதுமே போற்றிக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவை, வங்காளத்திலே, ''தசரா'' என்று சொல்லுகிறார்கள். இந்த விடுமுறையைப் பூஜா விடுமுறை என்று சொல்லுவார்கள். பூஜை என்றாலே தேவியின் வழிபாடு. ஒரு காலத்திலே வங்காளத்திலே சாக்தர்கள் (சக்தி உபாஸகர்கள்) இருந்தார்கள். அவர்கள் பரம்பரையினரான சிலர் இன்னும் தாந்திரிகமுறைப்படி உயிர்ப் பலியிட்டே காளியை வழிபடுகிறார்கள்.

''அன்பே பிரதானம். அன்பின் வழியது உயிர்நிலை. அன்புருவானவர் கடவுள்''என்று நம் மதம் சொல்லுகிறது. ஆனால் ஒளிக்குப்பின் நிழல்போல குரூரமான ''பலி''களினால் தெய்வத்தைத் திருப்தி செய்துவிடலாமென்கின்ற ஒரு அசட்டு மனோபாவம் இருந்துகொண்டே வந்திருக்கிறது. இன்னும் இருக்கிறது. இந்த அவிவேகம் நம் நாட்டைவிட்டு என்று தொலையுமோ? பலி என்பதன் கருத்து, மனிதன் தன்னிடமுள்ள தீய குணங்களைக் கொன்றுவிடவேண்டும் என்பது. ''புத்தி என்கிற வாளாயுதத்தினால் அறியாமையை வெட்டித் தொலைத்துவிடு. வேண்டாத ஆசைகள் பொறாமை முதலியவைகளை ஒழி'' என்று பெரியோர் குறித்திருக்கலாம். அது எப்படியோ மாறி மனிதன் தன்னைத்தானே பலியிட்டுக்கொள்ளுவது என்ற வரையில் வந்துவிட்டது. பிறருக்கு நன்மை பயக்குமானால் தன் இன்பங்களையும் துறந்து பணி செய்யவேண்டும் என்பதுதான் கருத்து. தன் இன்பங்களைத் துறப்பதைவிட உயிரையே துறந்துவிடுவது என்று ஆகிவிட்டது.

இதை நமக்குப் பதிலாக பேதை ஆடுகளையும் கோழிகளையும் கொன்று தேவி வழிபாடு என்று ஆக்கிவிட்டார்கள் பின் வந்தவர்கள். என்ன மதியீனம். இந்த விபரீதமான எண்ணம் நெஞ்சிலேதான் எப்படிப்புகுந்ததோ? இதே கருத்தைப் புதுமைக் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் புத்தபிரானது சரிதத்திலே வெகு அழகாகக் கேட்கிறார்.

காட்டுப்புலியின் கொடுமையஞ்சி உங்கள்
கால் நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ ?—அந்த
நான்மறை போற்றிடும் நீதி ஐயா !

மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ ? இதைச்
சற்றுநீர் யோசித்துப்பாருமையா ?

என்ற அடிகள் நமது நெஞ்சை அள்ளுகின்றன. ஆம்! பலகீனமான ஒரு குழந்தையைக் கொன்று மற்றொரு குழந்தை விருந்து செய்வது போன்றதுதானே ? பொதுவாக பலகீனமானதும் குறைவுள்ளதுமான குழந்தைகளிடம் மற்றக் குழந்தைகளைக் காட்டிலும் அதிகமான வாஞ்சை இருப்பதே உலகியல்பு, இன்றும் நம் தமிழ் நாட்டிலே, இந்த வழக்கம் இருந்து வருகிறது. இதை அடியோடு ஒழிப்பதற்குப் பெண்மணிகள் முன் வந்து பிரசாரம் செய்யவேண்டும். ஆடி தொடங்கி புரட்டாசி வரையில் அங்கங்கே உயிர்ப்பலிகள் மிகுதி. ஜீவசம்ரக்ஷண சங்கத்தார் பெருமுயற்சி செய்து பிரசாரம் செய்தும் போதுமான அளவு பலனில்லை. கேட்டால், தாம் உண்ணும் பொருளை எம்பெருமானுக்கு அர்ப்பணம் செய்கிறார்களாம்!

புரட்டாசியின் பெருமைக்குப் பதில் இதன் சிறுமையைச் சொல்லு கிறேனே என்று மலைக்காதீர்கள். இதோ விஷயத்திற்கு வந்துவிடுகிறேன். பொதுவாக உலகத்தில் நாம் எந்தக் காரியத்தைச் செய்வதற்கும், முதலில் எதுவேண்டும்? சக்தி. கன்னி மாதத்தில் மஹாளய அமாவாசை தொடங்கிப் பூர்ணிமை வரை இடையே உள்ள முதல் ஒன்பது நாட்களில் தேவியை வழிபடுபவர்கள் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டியவற்றைப் பெறுகி றார்கள் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். மனிதனுக்கு முதல் தேவையாகிய சக்தியைப் பெறுவதற்கு முதல் மூன்றுநாட்களிலும் சக்தியை வழிபடுகிறான். ஆனால் வெறும் சக்தி மட்டுமிருந்தால் போதுமா? சக்தியைத் தகுந்த வழியில் உபயோகிப்பதற்குப் பொருளும் அறிவும் அவசியம், இதன் பொருட்டு இரண்டாவது மூன்று நாட்களில் ஸ்ரீதேவியைத் தொழுகிறான். சக்தியும், பொருளும் இருந்து அறிவு இல்லாமலிருந்தால் என்ன பயன்? ஆகவே மூன்றாவது மூன்று நாட்களில் அறிவுத் தெய்வமாகிய கலைமகளை வழிபடுகிறான். முறையே ஒன்பது நாட்களில் மூவரது அருளையும் பெற் றுக்கடைசியாக மகா நவமி யன்று, மூவரும் ஒன்றே என்று கலைமகளையும் மலைமகளையும் அலைமகளையும் ஒன்றாய் வழிபட்டு அருளைப் பெறுகிறான்.

ஸரஸ்வதி பூஜையன்று தொழிலாளிகள் தங்கள் கலைவளர்க்கும் கருவி களைவைத்து "ஆயுத பூஜை" என்ற பெயரால் கும்பிடுகிறார்கள்.

மறுநாள், மகிஷாஸுரனை வதைத்த திருநாள். ஆயுதங்களைப் பூசித்து எடுத்தே விஜய தசமியில் வெற்றி பெற்றாள் பராசக்தி என்று புராணம் சொல்லும். மைசூரில் இந்த விழா மிகவும் விமரிசையாய்க் கொண்டாடப் படும். உண்மையில் மகிஷாஸுரன் வசித்தது மைசூர்தானாம்! மகிஷூர் என்பது மைஸூர் என்று மருவிவிட்டது.

இதை ஒட்டிய பூர்ணிமையில் 'நிறை மணி' என்றொரு விழா சிவால யங்களிலே நடைபெறும். எங்கும் நிறைந்து நிற்கும் தேவியின் திருவுருவை, அவள் படைத்த பொருள்கள் ஒவ்வொன்றிலும் காண்பதுபோல கோயில் முழுதும் ஒரே அலங்காரம். ஊரிலுள்ள காய், கனி, கிழங்கு, இலை, புஷ்பம், பணியாரம் பட்சணவகைகள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் அன்று கோயிலில் காணலாம். நெற்கதிர்கள், சோளக்கதிர்கள், கம்பு, தினை, சாமை, கேழ்வரகு, இவைகளின் கதிர்கள், எல்லாம் தோரணங்களாகிக் காட்சிதரும். உறிகளில் பரங்கி, பூசணி முதலிய பெரிய காய்கள் ஊச லாடும். தேங்காய், பனை, ஈச்சை, வாழை முதலியவைகள் குலை குலையாய்த் தொங்கும், வேர்க்கடலை முதல் பச்சைமிளகாய், கீரைத்தண்டுவரையில், எல்லாவிதமான காய்கறிகளும் தோரணங்கள்போலவே விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்டுக் காண்போர். கண்களையும் கருத்தையும் கவரும்.

தற்காலக் குழந்தைகள் இதென்ன விவசாயப் பொருட்காட்சியா? என்று அதிசயிப்பார். இந்த நிறைபணியோடு விழா நவராத்ரிமுடியும், குழந்தைகள் சிரமம் தீர விடாய் ஆற்றிக்கொள்வார்கள். நவராத்ரிமண்ட பத்திலிருந்து தேவியும் கோயிலுக்குச் செல்வாள்.

இன்னும் எவ்வளவோ விசேஷங்கள் உண்டு. விஷ்ணுபக்தர்களிலே சிறந்த வேதாந்ததேசிகரது அவதாரம் இந்த மாதத்திலேதான். 'எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்' என்ற போதனையை போதித்த நந்தனார் என்னும் திருநாளைப்போவார் பிறந்ததும் இந்த மாதம்தான். இவைகளை விட வேறு பெருமைகளும் வேண்டுமா?




## 10

# ஸ்ரீ. ஜானம்மாள்

சுமார் 15, 16 வருஷங்களுக்கு முன்பு இருக்கலாம். சகோதரி சுப்புலக்ஷ்மியம்மாள் நடத்தி வந்த சாரதா ஐக்ய சங்கத்தின் கூட்டத்திற்கு அவரது அழைப்பிற் கிணங்க நான் சென்றிருந்தேன். அங்கு இரண்டு பெண்மணிகள் மிகவும் எளிய உடையில் ஆனால் உயர்ந்த தோரணையுடன் வந்து அமர்ந்தார்கள். அவர்களில் ஒருவர், தமது இடுப்பில் வெள்ளி ஒட்டியாண மணிந்துகொண்டு அதில் ஒரு சாவிக் கொத்துச் சங்கிலியுடன் ஊஞ்சலாடிக் கொண்டிருந்ததைப் பார்த்த கூட்டத்திலிருந்த வேறொருவர் ஒருமாதிரியாக கைத்துக்கொண்டே "அடராமா!...தங்கமயமாயிருக்கும் நாகரீகம் மிகுந்த இக்காலத்தில் வெள்ளி ஒட்டியாணங்கூட தலைகாட்டுகிறதே ஒட்டியாணம் போட்டுக்கொள்ள ஆசையிருந்தால் தங்கமுலாமாவது தோய்த்துபோட்டுக் கொள்ளக்கூடாதா!இதென்ன கோரம்?" என்று இளப்பமாக சொன்னார்கள்.

அதைக் கேட்ட பக்கத்திலிருந்த இன்னொரு பெரியம்மாள் 'ச்சு மெல்ல பேசுங்கோ! "துத்தி எடுத்தாலும் சம்பா! குப்பையில் கிடந்தாலும் மாணிக்கம். நாடறிந்த பாப்பானுக்குப் பூணூல் எதற்கு? நிறை குடம் நீர் தளும்புமா!' என்கிற பழமொழிகள் இந்தம்மாளின் குடும்பத்தில் பிரத்யக்ஷமாகக் காணலாம். நீங்கள், ஏதோ தங்க ஒட்டியாணம் செய்துகொள்ள சக்தியில்லாது வெள்ளி ஒட்டியாணம் போட்டுக்கொண்டிருப்பதாக மிகவும் கேவலமாக நினைத்துவிடவேண்டாம். அந்தம்மாள் மனது வைத்தால் ஆயிரம் பேருக்குத் தங்க ஒட்டியாணம் செய்து ஒரு பஞ்சாதியுடன் தானங்கூடச் செய்யலாம் தெரியுமா! அந்தம்மாளை யார் என்று நினைத்தீர்கள். ஜட்ஜ் ஸர். வி. பாஷ்யமய்யங்காரின் கடைசீ புதல்வி ஸ்ரீமதி ஜானம்மாள் இவர் தான். அவருடன்கூட இருப்பவர்தான் ஜானம்மாளின் சகோதரியின் புதல்வி ஸ்ரீமதி அம்புஜம்மாள். அவர்கள் இருவரும் ஆடம்பரமான வாழ்க்கையை வெறுத்தவர்கள். படாடோபமில்லாதிருக்கவே நீங்கள் மிகவும் ஏழை என்று நினைத்துவிட்டீர்கள்" என்றார்.

இதைக் கேட்டதும் அந்தம்மாள் உண்மையில் தான் தவறுதலாக எண்ணிப் பேசியதை நினைத்துப் பயந்துவிட்டார்கள். "ஐயோ! எனக்குத் தெரியாமல் சொல்லிவிட்டேன். பாஷ்யமய்யங்காரின் மகளா இவர்! இந்தம்மாளுடைய தாயாரின் தயாள குணமும் கை சலிக்காது தர்மம் செய்யும் உத்தம லக்ஷணமும் உலகமே அறியுமே! அவர்களுடைய குடும்பமே தர்மம்

செய்வதற்கே பிறந்ததாயிற்றே! அம்மா! என் தப்பிதத்தை மறந்துவிட வேண்டும். இந்த காலத்தில் ஆடம்பரந்தானே ஆளை மயக்குகிறது" என்றார்.

அதற்குள் பக்கத்திலிருந்த இன்னொரு அம்மாள் பேசத் தொடங்கி, "நீங்கள் சொல்வது வாஸ்தவம். ஆடம்பரந்தான் உலகத்தையே ஏமாற்றுகிறது. காலணு தர்மம் செய்யாதவர்கள் ஒரு சமயம் தப்பித்தவறி ஏதாவது தர்மம் செய்துவிட்டால் அதை பிரமாதப்படுத்தி பத்திரிகைகளில் போடுவதும், சிலர் சாசனம் செய்வதுமாகத் தடபுடல் படுத்துவார்கள். இந்தம்மாளுடைய தகப்பனுரிடம் ஏழைகள் கல்யாணம், உபநயனம் என்று யாசகத்திற்கு வந்தால் 100, 50, 25 இதற்குக் குறைந்து கொடுத்ததில்லை. எத்தனையோ ஏழைப் பெண்களுக்குக் கல்யாணதானமேசெய்து கொடுத்திருக்கிறார்கள். மதுரையின் பக்கத்திலுள்ள திருமோகூரில் கோயிலுக்கு நிரந்தரமான மானியங்கள் விட்டிருக்கிறார்கள். நமது திருவல்லிக்கேணி கோஷா ஆஸ்பத்திரியில் ஒரு வார்டு கட்டியிருக்கிறார். இப்போதும் லேடி பாஷ்யமய்யங்கார்பேரில் திகழ்கின்றது. எத்தனையோ ஏழை மாணவர்களுக்குக் கல்வி தானம் செய்திருக்கிறார். நூற்றுக்கணக்கான சுமங்கலிகளுக்கும், பிராமணர்களுக்கும் வஸ்திர தானம் கொடுத்திருப்பது அளவிடமுடியாது. இதெல்லாம் அவர்கள் பிரக்யாதிக்காகச் செய்ததில்லை. ஆத்மார்த்தமாகச் செய்துள்ள தர்மங்களாகும். பெரிய குடும்பம். நிறைந்த செல்வம், சிறந்த தருமம் எல்லாம் ஒருங்கே கூடியிருக்கிறது. பெற்றோர் காலமாகிய பிறகு இவர்களும் எத்தனையோ தருமங்கள் செய்கிறார்கள்" என்றார்.

முதலில் கூறிய அம்மாள்..."ஏம்மா! இந்த ஜானம்மாளுக்கு எத்தனை குழந்தைகள்?" என்றார். பிறகு பேசியவர் சற்று விசனம் தேங்கிய முகத்துடன், "உம்...அந்த பாக்யந்தான் இல்லை. பச்சைக்குழந்தை என்றால் மிகையாகாது. அத்தனை இளம் வயதிலேயே விதவையாகிவிட்டாள். இந்த குழந்தைக்கு மனதில் விசனம் தெரியக்கூடாதென்பதற்காகவே இவளுடைய தகப்பனுர் இவளை ஒரு ஆண்பிள்ளையை வளர்ப்பதுபோல் செல்லங் கொடுத்து வளர்த்துவிட்டார். கிளப்புக்குப் போவது, பலவித கேளிக்கைகள் விளையாடுவது. பந்தாட்டங்களில் பரிசு பெறுவது, தானே தமாஷாக சில சரித்திரங்களை வசனமாயும் பாட்டாயும் எழுதி கிளப்பில் ஹரிகதை செய்வது, பொது விஷயங்களின் செலவுக்காகப் பணம் வசூலிக்கக் கண்காக்ஷிகள் தயார் செய்வது, சென்ற மகா யுத்தத்தின்போது இந்திய சிப்பாய்களுக்குத் தாமே சொந்தமாக ஏராளமான உடுப்புகள் தைத்தும் பிறரிடம் சேகரித்தும் அனுப்பி உதவியது போன்ற காரியங்கள் பற்பல செய்திருக்கிறார்கள். சற்று நேரங்கூட வீண் பொழுதுபோக்க மாட்டாள். தன் தகப்பனுர் தினம் சாப்பிடும்போது தமிழ் பத்திரிகை படித்துச் சொல்வது, வீட்டுக் கணக்குகள் எழுதுவது, விருந்துகள் நடத்துவது முதலியவை ஓயாது. கவர்னரின் மனைவி இந்தம்மாளுக்கு ஆப்த சிநேகம். தினம் அவர்கள் வீட்டிற்கு சர்வ சாதாரணமாகச் செல்வார்கள். அவர்களும் வருவார்களாம். கவர்னர் பென்ட்லெண்டின் மனைவி அவருக்குப் பலவித தையல்கள் சொல்லிக்கொடுத்தாராம். அவர் நடத்திய ஒரு வகுப்பில் ஜானம்மாள் தான் மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுத்தாராம். அப்போதெல்லாம வெள்ளைக்காரர்களின் சிநேகம் வெகுவாய் இருந்தது.

முதலவர்:—இப்போது கதர் புடவை உடுத்தியிருக்கிறாரே...அந்த மாதிரி மனுஷியா இப்படி மாறிவிட்டார்?

இரண்டாவதுவர்:—ஆமாம். உலகமே தலைகீழாக மாறும் காலங்கள் வரும்போது மனிதர்கள் மாறும் காலம் வருவது அதிசயமா? இவருடைய சகோதரியின் வீட்டில் (S. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் வீடு) மகாத்மா காந்தியடிகள் முதல் முதல் வந்து இறங்கியபோது அப்புனித மூர்த்தியின் தரிசனம் செய்த மாத்திரத்தில் த்யாகாக்கினிச்சுடர் வீசும் அம் மகானின் உபதேசத்தைக் கேட்டமாத்திரத்தில் முற்றிலும் மாறியதோடு ஒரு தேச சேவிகையாகவே உருவெடுத்துவிட்டாள். அதுமுதல் தேச ஊழியம் என்றால் முதல் தாம்பூலம் அவருக்குத்தான். மகாத்மா, தாம்கொண்டுவந்திருந்த கதர் துணிகளை இந்தம்மாளிடம் கொடுத்து 'இதை முற்றிலும் நீ விற்றுத் தரவேண்டும்' என்றாராம்.

காந்தியே பிரமிக்கும்படி 500 ரூபாயிக்குமேல் உடனே விற்றுக் கொடுத்தாராம். மகாத்மா காந்தி, S. ஸ்ரீனிவாஸ ஐயங்காரை நோக்கி, "சார்! இந்தம்மாளைப்போலும்அம்புஜம்மாளைப்போலும் பெண்கள் எனக்குக் கிடைத்தால்போதும். இவர்களை என்னிடமே கொடுத்துவிடுகிறீர்களா!" என்று கேட்டாராம். வேலை செய்வதில் அத்தனை சுறுசுறுப்பு. அன்று முதலே தேசசேவையில் ஈடுபட்டு கதர் விற்பது, காங்கிரஸ் வேலை செய்வது முதலிய வழியில் திரும்பிவிட்டார்கள்."

என்று அந்தம்மாளைப் பேசியதை எல்லாம் நான் கல்லுப்பிள்ளையாரைப்போல் அசையாமல் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தேன். "அத்தகைய மனிதர்களின் நட்பு நமக்குக் கிடைக்கவேண்டுமே" என்ற ஆசை என் மனத்தில் பலமாக எழுந்தது. ஏற்கெனவே நானும் மகாத்மா காந்தியடிகளின் தரிசன காலத்தில் அம்புஜம்மாளை ஒரே தடவைதான் பார்த்திருக்கிறேன். என்னுடைய ஆவலை உடனே நிறைவேற்றும் பொருட்டே கடவுள் சகோதரி சுப்புலக்ஷ்மியம்மாளை அனுப்பியதுபோல் அவர் வந்து,

"கோதையம்மாள்! நீங்கள் முதலில் வாய்ப்பாட்டு ஒன்று பாடவேண்டும். பிறகு ஸ்ரீமதி ஜானம்மாள் வீணை வாசிப்பார்கள். அவர்களை உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்றார். நான் தெரியாதென்றவுடனே என்னை அவர்களிடம் அழைத்துச் சென்று, "ஜானம்மாள்! இந்தம்மாளை உங்களுக்குத் தெரிந்திருக்கலாமோ என்னமோ! ஜகன்மோகினி பத்திரிகாசிரியர். ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள்...என்றெல்லாம் அறிமுகம் செய்துவைத்தார்கள்.

ஜானம்மாளிடம் அன்று இரண்டொரு வார்த்தைகள் பேச சமயம் கிடைத்தது. அவர் வீணையில் "ஏலா அவதாரமெத்திதிவோ" என்கிற மூகாரி ராகக் கீர்த்தனையை வீணை வாசித்துப் பாடினார். அது முதல் சாரதா ஐக்ய சங்கத்தின் கூட்டத்தில் அவரை அடிக்கடி சந்தித்தேன்.

பிறகு அவர்கள் தேசீய இயக்கத்தில் வெகு மும்முரமாக வேலை செய்து உப்பு சத்யாக்ரகத்தின்போது சிறைச்சாலைக்குச் சென்றார்கள். உடனே சமாதானம் வந்ததும் விடுதலையாகி வந்தார்கள். சமாதான காலத்தில்தான் அந்தம்மாள் சுதேசி லீகை வெகு ஒழுங்காக நடத்தியதோடு கதர் பிரசாரம், காங்கிரஸ் பிரசாரம் முதலியன செய்தார்கள். அக்காலங்களில் பல ஊர்களுக்கும் கிராமங்களுக்கும் நாங்கள் இருவரும் சுற்றுப் பிரயாணம் செய்தோம். எடுத்த காரியத்தைவிடாது செய்து முடிக்கும் ஆற்றல் மிகுந்த அவர் சுதேசி லீகை வெகு திறமையாக நடத்தினார். அந்த லீகின் அங்கத்தினரான பல பெண்மணிகள் மறுபடியும் நடந்த சத்யாக்ரகப் போரில் சிறைச்சாலைக்குச் சென்றார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஜானம்மாளும்

னாலும் ஒன்ருகச் சிறையில் ஒருதாய் வயிற்றுச் சகோதரிகளைப்போல் இருந்தோம். அவருக்குத் தெரியாத வேலையே இல்லை. சமையல், பலகாரம், ஊறுகாய் முதலியன செய்வதில் பேர்பெற்ற சமையல்காரன்கூட தோற்றுப்போவான். தையல் வேலை க்ரோஷியா வேலை முதலியனவும் நன்ருகத் தெரியும். அவருடைய எழுத்துத் திறமையை நீங்கள் "எனது லில்லி" என்ற அவர் அனுபவக் கட்டுரையிலும், அவர் நமது மோகினியில் இன்னும் பல கட்டுரைகள் எழுதியிருப்பதிலிருந்தும் நன்கு தெரிந்திருக்கலாம். பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், சிறு கதைகள் முதலியன எழுதியிருக்கிருர். மைலாப்பூர் லேடீஸ் கிளப்பில் பலமுறை காரியதரிசியாக வேலை செய்திருக்கிருர். கிளப்பின் சார்பாக பலவித கதம்பக் கொண்டாட்டங்களை நடத்தி பீஹார் பூகம்ப நிதிக்கும் மற்ற இதர சேரி, குப்பம், முதலியவைகளுக்கும் தருமம் செய்திருக்கிருர்.

ஹிந்தி, சம்ஸ்கிருதம், இங்க்லீஷ், தமிழ் ஆகைய பாஷைகள் நன்கறிந்தவர். தாம் கற்றதைப் பிறருக்கு உபயோகிக்கும் அரிய நோக்கத்துடன் தன் வீட்டிலேயே ஹிந்தி வகுப்பு வைத்து நடத்தி பரீக்ஷையிலும் பெண்மணிகளைத் தேறச் செய்திருக்கிருர். "ஏழை பணக்காரர் என்கிற வித்தியாஸமற்ற சமதரிசியாய் நீ இருக்கவேண்டும்" என்று அவருடைய தந்தை ஆதியில் சதா உபதேசிப்பாராம். அதையே தன் லக்ஷியமாகக் கடைபிடித்து வருகிருர். சாரதா ஐக்யசங்கத்தின் உதவிக்காக பணம் திரட்டுவதற்கு செட்டிநாடு முதலிய இடங்களுக்குச் சென்று நிதி சேகரித்து உதவினர். இது போல் பலவிதத்தில் பண உதவி செய்திருக்கிருர்.

அவரும் அம்புஜம்மாளும் மகாத்மா காந்தியடிகளின் அன்பைப் பரிபூர்ணமாகப் பெற்றவர்கள். ஜானம்மாள் வார்தா சேவாகிராமத்தில் காந்திஜியுடன் ஒருமாதகாலம் இருந்த பேறு பெற்றிருக்கிருர். எல்லோரிடத்திலும் குழந்தை மாதிரி பேசியும் வரவேற்றும் வெகு உத்ஸாகமாக எப்போதும் காணப்படுவார்.

பம்பாயில் நடந்த காங்கிரஸுக்கு நாங்கள் இருவரும் அம்புஜம்மாளுடன் ஒன்ருகச் சென்ருேம். அங்கு மகாத்மாவின் தரிசனம் செய்வதற்கும் அவர் பேசுவதை எனக்கும், நான் பேசுவதை அவருக்கும் மொழி பெயர்த்துதவியவர்கள் எனது ஆப்த சிநேகிதைகளான அம்புஜம்மாளும், ஜானம்மாளுமே ஆவார்கள். தற்சமயம் பர்மா, மலேயா முதலிய இடங்களிலிருந்து வரும் இவாக்வீஸுக்கு உதவி புரிகிருர்கள். சாரதா வித்யாலத்திலும் ஒரு அங்கத்தினராயிருந்து வருகிருர்கள்.

அவருக்கு சிறு பிராயம் முதற்கொண்டு பிராணிகளிடத்தில் அதிக பிரீதியாம். கிளி, மைனு, புறு முதலியவைகளை வளர்த்து அதோடு விளையாடுவாராம். இப்போதும் அவருடன் விளையாடவும், அவருக்குத் தோழனுகத் தொண்டுபுரிவதற்கும், காவல்காரனுய் உழைப்பதற்கும் அவருடைய அருமை லில்லிதான் முக்கிய ஸ்தானத்திலிருக்கிறது.

தனது வாழ்நாளில் சம்சார பந்தங்கள் ஏதுமின்றி ஒரு துறவியைப் போல் இருந்துகொண்டு தேசத் தொண்டும், சமூகத்தொண்டும் செய்து அந்த இன்பத்திலேயே அவர் ஆழ்ந்து அனுபவிக்கின்ருர். அத்தகைய சிநேகிதையைப்பற்றி அறிமுகம் செய்வதில் எனக்குள்ள உத்ஸாகத்தைக் கூறவேமுடியாது.

வை. மு. கோ.

கர்வமும் இறுமாப்பும் கொண்ட நிலையில் படுத்திருக்கும் இந்திராவிடம் பேசமுடியாது துக்கம் இதயத்தைப் பிறிக்கொண்டு வருகிறது. விம்மலுடன் பேசத்தொடங்கி, "அக்கா! நான் போய்வருகிறேன். பிறந்ததுமுதல் இந்த நிமிடம்வரையில் உன்னை நான் பிரிந்ததில்லை. என் போதாக்காலக் கொடுமையின் பலன்தான் உனக்கு என்மீது கசப்பு உண்டாகவும் நான் பிரியவும் விதி அமைந்தது. என்மீது நீ இன்னும் வீண் சந்தேகம் கொள்ள இடம் கொடுக்காமலிருப்பதற்கே நான் ஊருக்குப்போகிறேன். உன் சந்தேகத்தை ஆண்டவன் நிவர்த்திப்பானாக" என்று பெரிய வேதாந்தியைப் போல் கூறிவிட்டு வெளியே போக எத்தனித்தாள்.

இந்திரா கல்லினுங்கொடிய இதயத்தையுடையவளாயினும் சந்திராவின் கண்ணீரும், உணர்ச்சி மிக்க வார்த்தையும் அவளையறியாமல் ஒரு ஆட்டு ஆட்டிவிட்டன. சந்திராவைப் பார்க்கிறாள். கண்ணீரைக் காட்டாற்று வெள்ளம்போல் கொட்டுகிறாள். "என்னுடைய மிருகத்தனமான செய்கையின் பலனல்லவா இந்த இளந்தளிர்போன்ற உள்ளத்தை வாட்டி வதக்கிக் கருகச்செய்துவிட்டது. சந்திராவைப் போகவேண்டாம் என்று சொல்லிவிடலாமா?" என்றும் ஒரு விநாடி தோன்றியது.

சந்திராவைத் தான் அறியாதவாறே சேர்த்துக் கட்டிக்கொண்டாள். வாய் பேசாது மௌனமாகவே சந்திராவின் தோள்மீது சாய்ந்து அவளை இமைகொட்டாது பார்த்தாள். இத்தனை வருஷங்களாகப் பார்க்கும் சந்திராவின் பிம்பம் இப்போது அபூர்வ தேவ கன்னியையொத்த எழில் பிரவாகம்போல் பெருகியதைக் காணக் காண அவளுடைய இதயத்தில் ஆழமாகப் பதிந்திருந்த சந்தேகப் பிசாசு சற்று தலைதூக்கி ஆட வாரம்பித்தது.

"இந்த நிகரிலாத அழகன்றோ எனது சத்ருவாக அமைந்தது. சத்ருத்தனத்தைத் தன்பால் அபரிமிதமாக வைத்திருக்கும்போது நான் எப்படி அனுகூலியாக விருக்கமுடியும்? என் புருஷனின் தடுமாறும் மனது பின்னும் பித்துபிடித்துப் போய்விடுமே? என் வாழ்நாளே அந்தத் தீயினால் பொசுங்கிவிடாதா!...ஆம்...கட்டாயம் பாழாகியே போகும். இதற்கு இடந் தரலாகாது" என்று அதி தீவிரமாகத் தோன்றியது.

எனினும் தான் இத்தனை கராகண்டிதயாக நடந்துகொண்டும் தன்னிடம் ஒரு த்வேஷமும் காட்டாத சந்திராவின் குணத்தின் மேன்மை வியக்கச் செய்தது. சந்திராவின் கன்னங்களை இரு கைகளாலும் பிடித்து தன் முகத்திற்கு நேராக வைத்துக்கொண்டு "சந்திரா! என்மீது உனக்குக் கோபம் ஏராளமாகவிருக்கலாம். அப்படி இருப்பதும் சகஜமே!...எல்லாம் நல்லதற்கே! என்கிற பழமொழியை நம்பு. உன்னை நான் பிரிந்திருக்க கனவில்கூட நினைக்கவில்லை. உனக்கும் எனக்கும் நடுவில் உள்ள ஒரு பிசாசு நம்மை இப்படி ஆட்டுகிறது. அதுதான் காதல் பிசாசு. என் கணவருடைய மனப்

போக்கை அறிந்து உன்னைக் காக்கும் பொருட்டே உனக்கு நான் அந்த கடிதம் எழுதினேன். அவரால் உனக்கு ஒருவிதமான விபத்தும் வாராதிருக்க நான் கடவுளை பிரார்த்திக்கிறேன். நான் கடிதமெழுதியதற்காக வருந்தாதே! மன்னித்துவிடு. நீ சுகமாகப் போய் வா!'' என்று தன் வஞ்சக எண்ணத்தைத் தன் கணவன்மீது பழியைப்போட்டுத் தான் தப்பித்துக் கொள்ளும்பொருட்டுத் தந்திரமாகப் பேசினாள்.

இதைக்கேட்ட சந்திராவின் உள்ளம் சுக்கல் நூறாகச் சிதறியது போலாகியது. "என்ன!...என்ன!... அக்கா! என்னைக் காக்கும் பொருட்டா எனக்கு அத்தகைய கடிதம் எழுதினாய்?...கடிதத்தில் என்பேரில் பழி காட்டினாய். நேரில் அத்திம்பேர் பேரில் பழியைக் காட்டுகிறாயே!...இதென்ன விநோதம்...எனக்கொன்றுமே புரியவில்லையே!'' என்றாள்.

அதே சமயம் சேகர் அவ்வறைக்கு வருவதைக் கண்டு இந்திராவின் உயிர் துடித்தது. "சந்திரா!....போய்விடு...வெளியே போய்விடு; அவர் வருகிறார்'' என்று ஆத்திரமும், பீதியும், குழப்பமும் கலந்த தொனியுடனும் பார்வையுடனும் சந்திராவைத் துரத்தினாள்.

அந்த அறை வாசற்படியருகில் நிற்கும் சேகரைப் பார்த்ததும் சந்திராவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. இந்திராவுக்குக் கேட்க வேண்டுமா? சந்திரா பேசாமல்போனாள். அன்று இரவு வண்டிக்குப் புறப்பட்டுவருவதாக கல்யாணியம்மாளுக்குத்தந்தியடிக்கப்பட்டது.

சந்திரா தன் வேலைக்காரக் கிழவியைக் கூடவே அழைத்துக் கொண்டு கிளம்பினாள். சேகருக்கு ஏற்கெனவே இருந்த சந்தேகம் இப்போது இன்னும் ஒரு படிக்கட்டு கூட அதிகமாயிற்று. சந்திராவை வழியனுப்ப இந்திரா போகவில்லை. தலைவலி என்று படுத்துக்கொண்டாள். காரில் ஏறும்போது, "சந்திரா! போய்வருகிறாயா! உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளம்மா!'' என்று சேகர், தானாகவேகூற அவள் தலையைமட்டும் அசைத்தாள்.

கார் பறந்தது. சிலமணி நேரத்திற்குள் ரயிலும் கிளம்பியது. சந்திராவுக்குத் தலைமீதிருந்த பெருஞ்சுமை குறைந்ததுபோன்ற ஒரு பெருமூச்சுவந்தது. தளிர்போன்ற இதயம் அப்போதும் என்ன நினைத்தது? "இனியாவது என் சகோதரி சந்தேகம் என்கிற வியாதி நீங்கி சந்தோஷமாக கணவனுடன் இருக்கும்படி ஆண்டவனே! அருள் செய்'' என்று வேண்டியது.

அமிருதவல்லியம்மாளுக்கும் ஒரே குழப்பமாகவிருக்கிறதேயன்றி உண்மை தெரியவில்லை. இந்திரா இல்லாமல் வீட்டுப்படியைக்கூட விட்டிறங்காதிருந்த சந்திரா இன்று, தானே ஊருக்குக் கிளப்புவதும் அவளை வழி யனுப்பக்கூட இந்திரா வராததும் வியப்பாக இருப்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

"தந்தியா! யாருக்கப்பா!" என்று கல்யாணியம்மாள் இடி விழுந்தவள்போல் சில விநாடிகள் தப்பித்துப்போனாள். "ஸாரநாதா! ஸாரநாதா! இங்குவா; தந்தி வந்திருக்கிறது. என்னவோ வயத்தைக் கலக்குகிறது" என்று கூப்பிட்டாள்.

தந்தி என்றவுடன் எத்தகையோருக்கும் திடுக்கிடுவது சகஜமல்லவா! "என்ன! தந்தியா!" என்று சற்று அலறியவாறு தந்தியைப் படித்தான். அடுத்த விநாடியே முகத்தில் சந்தோஷமும் ஆச்சரியமும் பொங்கின. "அம்மா! சந்திரா நாளைக்காலை இங்கு வருகிறாளாம். ஸ்டேஷனுக்குவரச்சொல்லிஎழுதியிருக்கிறார்பெரியப்பா"

என்றதைக் கேட்டதும் கல்யாணியம்மாளுக்குப் பொங்கி வரும் ஆனந்தத்தை அளவிடமுடியாது. "சந்திராவா வருகிறாள்!... என்ன சந்தோஷச்செய்தி! ஒரு பெரிய சுமங்கலி வருவதுபோல் கனவு கண்டேன். அதை எல்லோரும் லக்ஷ்மி தரிசனம் என்றார்கள். நமது கிரகலக்ஷ்மி தானாகவே வருகிறாள்போலிருக்கிறது. காருக்கு எங்காவதுஏற்பாடு செய்கிறாயா! ஒரு கார் வாங்காதது என்னகுறையாயிருக்கிறது பாரு. அந்த கட்டேலெபோகிற கடன்காரன் பணத்தைக் கொடுத்தால் உடனே கார் வாங்கிவிடலாம். நம்ம சுப்ரமணியனைச் சற்று கேட்டு வருகிறாயா!" என்றாள்.

சந்தோஷத்துடன் ஸாரநாதன் ஓடி காருக்கு ஏற்பாடு செய்து கொண்டு வந்தான். அவன் மனத்தில் அவனையறியாது ஒரு உத்ஸாகமும் ஆனந்தமும் பொங்குகிறது. "எதற்காக சந்திரா திடீரென்று இங்கு வருகிறாள்? ஒரு வேளை அவளே கல்யாணத்திற்கு இஷ்டப்பட்டு வருகிறாளா! அல்லது வேறு என்னவாகவிருக்கும்?" என்றுகல்யாணியம்மாளின் மனத்தில்அபாரமாக வேலை செய்கிறது. ஸாரநாதனுக்கும் அப்படியே என்று கூறவேண்டுமா!

இரவு தாயும் மகனும் தூங்கவே இல்லை. கல்யாணியம்மாளின் புருஷன் ஊரிலில்லையே, அவரும் அபாரமான சந்தோஷப்படுவாரே என்று பேசிக்கொண்டார்கள்.

ஸார:—அம்மா! முன்பே சந்திரா உன்னுடைய சமையலைச் சாப்பிடவேண்டுமென்றுஆசைப்பட்டாள். நாளைக்கு நீயே சமையல் செய்து டிப்பனும் செய்கிறாயாம்மா!

கல்:—ஆஹா! காத்துக்கொண்டிருக்கிறேன். உங்களிருவரையும் சந்தோஷப்படுத்துவதைவிட வேறு எனக்கு என்ன இருக்கிறது? அந்த கடவுள் எப்படியாவது கிருபை செய்து, அவள் உன் மனைவியானால் போதும். நீயும் அவளிடம் பேரன்பு வைத்திருப்பதும் எனக்குத் தெரியும். ஆண்டவன் அருள் செய்தால்போதும்.

தாயும் மகனும் இரவு முற்றும் இன்பக் கனவு கண்டுகொண்டே இரவைக் கழித்து மறுநாள் அதிகாலையிலேயே வண்டி வருவதால் ஸ்டேஷனுக்குக் காருடன் சென்றார்கள். அவர்களுடைய ஆவலை

வெகு விரைவிலேயே பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் அன்று குறித்த நேரத்திற்கு முன்னதாகவே வண்டி வந்து நின்றதுகண்டு ஸாரநாதனின் உள்ளம் பூரித்தது.

இரண்டாவது வகுப்பிலிருந்து அமிருதவல்லி இறங்கினாள். வாடி வதங்கி மெலிந்த சரீரத்துடன் சாரமற்ற சக்கையைப்போல் சந்திரா இறங்கினாள். அவளைப் பார்த்த கல்யாணியம்மாளுக்கும் ஸாரநாதனுக்கும் தூக்கிவாரிப்போட்டது. "சந்திராவா! என்ன இப்படி துரும்பாகிவிட்டாளே! என்ன உடம்பு?" என்று அங்கலாய்ப்புடன் கேட்டார்கள்.

அமி:—உம். இவள் பிழைத்ததே புனர்ஜென்மமாயிற்றே! உடல்நலத்திற்காகத்தான் இங்கு போகவேண்டுமென்று அவளே இஷ்டப்பட்டு வந்திருக்கிறாள். இவளை வெகு ஜாக்ரதையுடன் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு இனி உங்களுடையது. இவளைக் கொண்டுவிட்டுப் போகத்தான் நாங்கள் வந்தோம். கார் ஏதாவது வந்திருக்கிறதா!

ஸார:—ஆகா! வந்திருக்கு வாருங்கள்...டேய் கண்ணப்பா! மூட்டைகளைத் தனியாக ஒரு வண்டியில் ஏற்றி ஜாக்ரதையாக வீட்டுக்குக் கொண்டுபோ—என்று கூறிப் பின் எல்லோரையும் காரில் ஏறச் செய்தான். சந்திரா மெல்லிய தேகத்துடன் காரில் ஏறியபடியே, "என்ன அண்ணா! இன்று காலேஜ் உண்டா?" என்றாள்.

பழய வழக்கப்படி சந்திரா, அண்ணா வென்று கூப்பிட்டது ஸாரநாதனுக்கு ஏதோபோல் வெறுப்பாகத் தோன்றியது. அதை வெளியில் சொல்லவும் கூச்சமாயிருந்ததால் சொல்லவில்லை. "ஆம்! காலேஜ் உண்டு. நீ என்ன லீவு வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாயா! எத்தனை மாதத்திற்கு?" என்றான்.

சந்:—மாதங்களுக்கு மட்டுமில்லை அண்ணா! காலேஜுக்கே நமஸ்காரம் செய்தாயிற்று. இனி படிக்கப் போவதில்லை;

ஸார:—இதென்ன மாறுதல் சந்திரா! உன்னை ஹானர்ஸ் வரையில் படிக்கவைக்கப்போவதாக பெரியப்பா சொன்னார்களே! ஏன் நிறுத்திவிட்டாய்?

சந்:—எனக்குப் பிடிக்கவில்லை. நான் அறியாத்தனமான சப்ஜெக்ட் எடுத்துக்கொண்டு ஆண்களோடு கூடச் சேர்ந்தது மகா குற்றம் என்பதைப் பிறகு அறிந்தேன். சில மாணவர்களின் குறும்புத்தனமும் கொழுப்பும் எனக்குப் பிடிக்காததால் நிறுத்தினேன்.

ஸார:—அப்படியானால் பட்டினத்திற்குப் போய் பெண்கள் காலேஜில் சேரலாமே! படிப்பதைக்கூட நிறுத்தலாமோ!

சந்:—உம்...நிறுத்தினால் என்ன? எனக்கு உடம்பு சரியாயில்லை. படித்துவிட்டு நான் என்ன உத்யோகம் செய்யப்போவது மிஞ்சிப் போயிற்று....இதற்குள் கார் வீட்டு வாசலில் நின்றதும் எல்லோரும் இறங்கிச் சென்றார்கள்.

கல்யாணியம்மாளுக்கும் ஸாரநாதனுக்கும் எத்தனைக் கெத்தனை சந்தோஷம் பொங்குகிறதோ, அதற்கு நேர் விரோதமாக சந்திரா வுக்கு துக்கம் துக்கமாக வருகிறது. அவளால் எத்தனை சமாளித்தும் கண்ணிலிருந்து பெருகும் அருவியைத் தடுக்கவே முடியவில்லை. தான் இந்திரா இல்லாது வந்திருப்பதொரு துக்கம். தன் ஆத்ம நேயனின் பிரிவு ஒரு சோகம், தன் சகோதரியின் சந்தேக பாணத் தினால் ஏற்பட்ட அளிந்த புண்ணின் நோய் ஒரு பக்கம் எல்லாமாகச் சேர்ந்து அவள் இதயத்தைப் பிளந்துவிடும்போல் செய்தன. அவை களைத் தாங்கமாட்டாது உள்ளம் துடித்தது.

## 18

முக்யமான கல்யாணங்களுக்குக்கூட தனியே போவதற்கு மாட்டேன் என்று பிடிவாதம் செய்யும் சந்திரா இன்று தனியாக, தானே போகவேண்டுமென்று கூறிச் சென்றது சேகர் மனத்தில் மிகுந்த பரபரப்பைக் கொடுத்தது. இந்திராவிடம் சந்திரா சொல்லிய வார்த்தைகளும் அன்று மயக்கமாயிருக்கும் போது நடந்துகொண்டமாதிரியும் ஏதோ ஒரு முக்கியமான மர்மம், இருவருக்கும் இடையில் போராடுவதாய்—புதைந்து கிடப்பதாய் அவனுக்குத் தோன்றியது. இதைப்பற்றித் தன் மனைவியைக் கேட்கவும் முடியவில்லை. இதேபோன்ற சந்தேகமும் கலவரமும் அமிருதவல்லியம்மாள் நரஸிம்மன் இருவர் மனத்திலும் போராடின. ஆனால் ஒருவராவது தம்தம் மனத்திலிருப்பதை வெளியிடவும் இல்லை. இந்திராவிடம் கேட்கவும் இல்லை. உலகத்திலுள்ள பல விசித்திரங் களில் இதுவும் ஒன்றல்லவா!

சந்திராவுக்கு கல்யாணியம்மாள் செய்யும் தடபுடல் உபசாரம் கூறவே முடியாது. அவளுக்கு மட்டும் தானே தன் கையால் சமைத்துப்போடுவதும் பலகாரங்கள் செய்துகொடுப்பதுமாக வெகு அன்போடு கவனித்துவந்தும் சந்திராவின் மனம் இருப்புகொள்ள வில்லை. முள்மேலிருப்பதுபோன்ற ஒரு வேதனை பாதிக்கின்றது. அதை வெளிக்காட்டிக்கொள்ளவும் முடியவில்லை. நிம்மதியற்ற மனத்துடன் சந்தோஷமாயிருப்பவள்போல் நடிப்பது மிகவும் சிரமமல்லவா! ஸாரநாதன் நிமிடத்துக்கு நிமிடம் விசாரிப்பதும் பேசுவதும் சந்திராவுக்கு சற்று தலைநோவாகவே இருந்தது. இருப் பினும் எப்படிச் சொல்வது? என்ன செய்வது? அசல் நோயாளி யைப்போல் படுக்கையிலேயே கிடப்பதற்கும் மனது பிடிக்கவில்லை. இதுதான் பூர்வஜென்மாந்திர பாதகம் என்பதோ!'' என்று சதா ஏங்குவாள்.

சந்திராவைக் கொண்டுவிட்ட மறுநாளே நரஸிம்மனும் அமிருத வல்லியும் போய்விட்டார்கள். பிடித்துவிட்டதுபோலிருக்கும் சந்

திராவைக் கண்டு கல்யாணியம்மாள் பரிதாபப்பட்டு, "சந்திரா! ஏனம்மா ஏதோமாதிரியிருக்கிறாய். உடம்பு ஒன்றுமில்லையே?" என்று கேட்டாள்.

சங்:—ஒன்றுமில்லை சித்தியம்மா! ஊருக்கு ஊர் புதிதுதானே! அதோடு ரயிலில் வந்த அலுப்பு வேறொன்றுமில்லை—என்றாள்.

அப்போது ஸாரநாதன், தினசரி, வார, மாதப் பத்திரிகைகளைக் கொண்டு வந்து சந்திராவின் முன்பு வைத்து "சந்திரா! உன் பொழுதுபோக்கிற்கு இவைகள் நல்ல துணையாகவிருக்குமென்று வாங்கிவந்தேன். லைப்ரெரியிலும் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்திருக்கிறேன். நிறைய நாவல்கள், நாடகங்கள், சரித்திரங்கள் முதலியன வரும்; படிக்கலாம்" என்றான்.

சந்திரா சந்தோஷத்துடன் பத்திரிகைகளை எடுத்துக்கொண்டு புரட்டியவாறு, "அண்ணா! எனக்குப் படிப்பதில் அதிக பிரியம் என்பதை நீ எப்படியோ அறிந்துகொண்டு வாங்கிவந்ததற்காக மிக்க வந்தனம். பத்திரிகைகளும் நவீனங்களும் படிப்பதைவிட வேறு ஆனந்தம் என்ன இருக்கிறது. சாப்பாடுகூடவேண்டாம். படித்துக்கொண்டே இருந்தால்போதும்" என்று கூறியவாறு ஒரு மாதப் பத்திரிகையைப் படித்தாள்.

அதில் 'பொழுதுபோக்கும், பத்திரிகைத் துணையும்' என்ற தலையங்கத்தைக்கண்டு "அண்ணா! அண்ணா! இதோ பார்த்தாயா! எனக்கு நீ சொல்லியபடியே தலையங்கமிட்டு யாரோ கட்டுரை எழுதியிருக்கிறார்கள்" என்றாள்.

ஸாரநாதனுக்கு சந்திரா அண்ணாவென்று கூப்பிடும்போது முள்ளு குத்துவதுபோலிருப்பதால் முகத்தைச் சுளித்துக்கொள்கிறானேயன்றி அதைக் கூற அஞ்சினான். "சரி நீ படித்துக்கொண்டிரு. நான் போய்வருகிறேன்" என்று கூறிச்சென்றான்.

பத்திரிகைகளிலுள்ள கட்டுரைகளையும் சிறு கதைகளையும் வெகு ஆனந்தமாகப் படித்துக்கொண்டிருக்கையில் ஆனந்த பைரவி ராக ஆலாபனை எங்கிருந்தோ காற்றில் மிதந்துவந்து சந்திராவின் செவியில் தேன்மாரியைப் பொழிந்தது. சங்கீதத்தில் மயங்காதவர்கள் யார் இருக்கிறார்கள்? அந்த அற்புத சங்கீதத்தைக் கேட்டு அதில் லயித்தவளாய் படிப்பதை மறந்து படுத்திருந்தாள்.

கல்யாணியம்மாள் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "ஐயோ! கிரகசாரம், மறுபடியும் ஒரு பிசாசு பிடித்துவிட்டது" என்று வெறுப்புடன் கூறினாள்.

சந்தி:—பிசாசா! அதென்ன சித்தியம்மா! யாருக்குப் பிடித்திருக்கிறது.

கல்:—யாருக்கும் இல்லை, நீ பயந்துவிடாதே சந்திரா! இந்த பக்கத்து பங்களா மிகவும் பெரியது. அதை விற்பதற்கு மூன்று வருஷங்களாக பிரயத்தனப்படுகிறார்கள். விலை மிகவும் அதிகம். பேராசைப்பிடித்து விலை கேட்டால் யார் வாங்குவார்கள். வாட

கையும் அதிகம். 200, 300 என்ருல் 2000-த்துக்குமேலே சம்பாதிக்கிறவர்கள்தான் அத்தனை வாடகை கொடுக்கமுடியும். அதனுல் எப்போதும் காலிதான்.

எப்போதாவது நாடகக்காரர்கள், சினிமாக்காரர்கள், தேவடியாள்கள், இம்மாதிரி யாராவது இருப்பார்கள். இப்போது ஒரு தேவடியாள் குடி வந்திருக்கிருள் என்று காலையில்தான் கேள்விப்பட்டேன். இனி கேளிக்கைகளுக்குக் கேட்கவேண்டுமா!" என்ருள்.

அதேசமயம் கல்யாணியம்மாளை அவசரமாக அவளுடைய புருஷன் கூப்பிட்டதால் எழுந்துபோனுள். சந்திரா ஆனந்தமாக அந்த சங்கீதத்தைக் கேட்டவாறு படுத்திருந்தாள். அவள் மனத்திற்கு அச் சங்கீதம் சிறிது ஆறுதலை அளித்தது.

## 19

"இதெல்லாம் என்ன பல்லிளிப்பய்யா! கொஞ்சங்கூட நாணயமில்லை. பணத்தை வாங்கிக்கொண்டபோதிருந்த அறிவு திருப்பிக்கொடுக்கும்போது செத்துவிட்டதா! "இதோ! அதோ!" என்று சாக்குக் கூறுவதா கண்ணியம், பெரிய மனுஷ்யர்கள் செய்யும் வேலையா இது? சுத்த அல்கா பசங்கள்-சோதாபசங்கள்-செய்யும் காரியமல்லவா? இனிமேல் தவணைக்கு இடமே இல்லை. முதலில் பணத்தை வைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கலாம்" என்று கடினமான த்வனியில் கல்யாணியம்மாளின் புருஷர் கூச்சலிட்டார்.

'ஏண்டா! பேமானித்தனத்திற்கும் ஒரு அளவு வேண்டாமா! சீச்சீ! திரும்பத் திரும்ப இதே அழுமூஞ்சி பல்லவியைப் பாட வெட்கமாயில்லையா! இதென்ன சொரணைகெட்டத்தனமோ!' என்று கல்யாணியம்மாளும், தான் ஒரு பெண்பிள்ளை என்பதையே மறந்து கோபாவேசத்துடன் கூச்சலிட்டாள்.

"அம்மா! எங்கள் கால வித்யாஸத்தின்கோலம் நீங்கள் என்ன சொல்லியபோதிலும் நாங்கள் கேட்கவேண்டியதுதான். உண்மையில் நாங்கள் உங்கள் கடனை எப்போது தீர்க்கப்போகிருேம், என்று நமது சங்கடம் நிவர்த்தியாகுமென்று எங்கள் மனது தவிக்கும் தவிப்பை பகவான்தான் அறியவேண்டும். எங்களை இம்மாதிரி சோதிக்கப்போகிருர் என்று நாங்கள் கனவுகூடக் காணவில்லை. ஜென்மாந்திரத்தின் பாவம் இப்படி ஆட்டுகிறது. இந்தமுறை தாங்கள் எப்படியாவது சற்று பொறுத்துக்கொண்டு எங்களைக் காப்பாற்றவேண்டும். என்னுடைய வார்த்தையை நம்புங்கள். என்னை அடகு வைத்தாவது உங்கள் கடனைத் தீர்த்துவிடுகிறேன். தள்ளாத காலத்தில் என் தந்தை இந்த வேதனையினுல் மிகவும் தவிக்கிருர். இச்சமயம் தாங்கள் பின்னும் பலவந்தம் செய்தால் அவர் உயிரேபோய் விடும். தயவு செய்யவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்கும்போது

அவன் நெஞ்சை அடைத்துக்கொண்டு துக்கம் பொங்கிவந்தது. கண்ணீர் ஆருய்ப்போவதை அவனுல் தடுக்கவேமுடியவில்லை.

ஆனந்தமாக ஒரு நாவலைப் படித்துக்கொண்டிருந்த சந்திரா கல்யாணியம்மாளும் அவள் கணவனும் சேர்ந்து கூச்சலிடு வதைக் கேட்டு, "ஐயோ! யாரை இப்படித் திட்டுகிருர்கள்? யாராக இருந்தால்தான் என்ன? இம்மாதிரி வாய் கூசாது திட்டுவார்களா! ஐயையோ! கேட்கும்போதே நடுங்குகிறதே. இந்த அர்ச்சனையை ஏற்றுக்கொள்ளும் ஆத்மாவுக்கு எப்படியிருக்கும்?" என்று வியப் புற்ருள். "அமிருதவல்லியம்மாளின் வாயில் இம்மாதிரியான வார்த் தைகள் ஒருபோதும் வந்ததே இல்லை. அவர்களுடன் கூடப் பிறந்த வர்களின் வாயில் இத்தகைய கடுமையான வார்த்தைகள் வரு கிறதே" என்று ஆச்சரியப்பட்டவாறு" எழுந்து போய்பார்க்கலாம்" என்று மெல்ல வெளியில் வந்தாள்.

அவர்கள் இருக்கும் இடத்திற்கும் சந்திரா வந்த இடத்திற்கும் மத்தியில் ஒரு ஜன்னலிருப்பதால் அந்த ஜன்னலருகில் வந்து நின்ருள். அதே சமயந்தான் கடன் வாங்கியவன் கண்ணீர் பெருக மனது துடிக்க வயிறு கொதிக்கப் பேசுவதைக் கண்டதும் அப் படியே தீயை மிதித்தவள்போல் துள்ளி, "ஹா...இவரா!...இவரா கடன்காரர்!...இவரையா இப்படித் திட்டுகிருர்கள்....என்னுருயிர் ஸ்ரீதரா இத்தகைய வசை பாணத்தால் தாக்குண்டு வருந்துவது?" என்று தனக்குள் எண்ணித் தவிக்கிருள்; துடிக்கிருள்.

எத்தனையோ நாட்களாக எதிர்பார்த்திருந்த இத் திரு உருவம் இன்று காணக்கிடைத்த பெரிய சந்தோஷத்துடன் மகத்தான சங் கடமும் உண்டாகும்படி இப்படியா அமையவேண்டும்?...ஸ்ரீதரா! இவர்களுடைய கடன்காரன்...ஐயோ! அன்னியர்கள் வீட்டில் நான் என்ன செய்வது? ஸ்ரீதரா...ஸ்ரீதரா...என்று கூப்பிட்டு விடலாமா என்று நெஞ்சு பதைக்கின்றது. நாக்கு அந்த இனிய நாமத்தைக் கூறுவதற்குப் போராவல் கொண்டு பதைக்கிறது. அன் னியர் வீட்டிலிருக்கும் நினைவு நாக்கை அடக்கி இதயத்தில்பொங்கி வரும் உணர்ச்சி வெள்ளத்தை அப்படியே தடைகட்டி பின்னுக்கு இழுக்கிறது.

என்ன செய்வாள் பாவம்! அனலில்பட்ட தளிர்போல் வாடி வருந்தும் சமயம் ஸாரநாதன் அங்கு வந்தான். ஸ்ரீதரனைப் பார்த்து, "ஓ!...பெரியவரா!...கிழவர் வந்தால் ஒரு வேளை ஏதாவது கலகம் நடக்கும். அதைத் தாங்கமுடியாதுபோகும் என்று பயந்து உங்களை அனுப்பி மழுப்பச்சொல்லியிருக்கிருரா!...சார்! மரியாதையாகச் சொல்லுகிறேன். இம்முறை வட்டியுடன் அசல் சேர்ந்து கணக் காக நாலாயிரத்து எழுநூறு ரூபாய் ஆகிறது; தண்ட எழவுக்காக அந்த எழுநூறு ரூபாயை வேண்டுமானுல் துலைத்துத் தலைமுழுகி விடுகிறேன்; நாலாயிரத்தை ரொக்கமாக இன்னும் இரண்டு நாட் களில் நீங்கள் செலுத்தாவிட்டால், கட்டாயம் கோர்ட்டில் போட்டு

விடுவேன். பணம் எனக்கு வராது மஞ்சள் கடிதம் கொடுத்தாலும் சரி. உங்கள் மானத்தை வாங்கிவிடுவதே சரி. வீண் பல்லிளிப்பு வேண்டாம்" என்று கேவலமான அலக்ஷியப் பார்வையுடன் கருகண்டிதமான தொனியில் கூறினுன்.

பதில் பேசமாட்டாது தத்தளிக்கும் ஸ்ரீதரனின் பரிதாபகரமான முகத்தைப் பார்க்கச் சகிக்காது சந்திராவின் இதயம் அப்படியே வெடித்துவிடும்போல் விம்முகிறது. நெஞ்சை யழுத்தும் வேதனையுடன் அந்த பிம்பத்தைப் பார்க்கிருள். எங்கே தன்னைப் பிறர் கண்டுவிடுவார்களோ என்கிற பயமும்கூடவே உண்டாகிறது. இந்த தர்ம சங்கடமான நிலைமையைச் சகிக்கமுடியாது மயக்கம் போட்டு விழுந்துவிடுவள்போன்று தோன்றியதால் மெல்ல அப்படியே உள்ளே வந்தாள். ஒன்றுமே தோன்ருது குழம்பியபடியே மீண்டும் வெளியேவந்தாள். ஸ்ரீதரனைத் தான் கூப்பிட்டுவிடலாமா என்று எண்ணிஞள். தான் இங்கிருப்பது தெரிந்தால் ஒருவேளை அவமானமும் அதிர்ச்சியும் அடைந்துவிடுவாரோ! அதனுல் ஏதாவது ஆபத்து நேருமோ! என்று ஒருபுறம் திகில் பகீர் என்கிறது. மற்ருெருபுறமோ இவர்களின் கருகண்டிதமான வார்த்தையைக்கேட்டு எங்கே மனந் தாங்காது தற்கொலை செய்துகொள்வாரோ! என்கிற பயம் மற்ருெருபுறம் நெஞ்சில் வாள்கொண்டறுக்கின்றது.

சில நிமிஷங்கள் ஒன்றுமே தோன்ருது துடித்தாள். உடனே எதையோ நினைத்தவள்போல் உள்ளே ஓடிவந்தாள். தனக்கு மிகவும் நம்பிக்கையான வேலைக்காரக் கிழவியைக் கூப்பிட்டு அவள் கைகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "நாகம்மா! அதிகம் விவாதிக்க நேரமில்லை. என்னைப் பெற்ற தாயைப்போல் எண்ணி உன்னிடம் நான் உயிருக்குயிரான ரகஸியத்தைச் சொல்லப்போகிறேன். நீ எனக்குப் பெத்த தாயைப்போலிருந்து உபகாரம் செய்வாயா! என்னைக் காட்டிக்கொடுக்காமல் காப்பாற்றுவாயா! உன்னை நான் நம்பலாமா! எனக்கு துரோகம் செய்யமாட்டாயே" என்று கெஞ்சிக்கேட்டாள்.

நாகம்மாள் சந்திரா பிறக்காததற்குமுன்பே சந்திராவின் தாயாரிடம் வேலைக்கிருந்த மனுஷியாதலாலும் சந்திராவின் பரதேசித்தனத்தைக்கண்டு சந்திராவை தன் குழந்தையைப்போலவே எண்ணி அதைக் காப்பாற்றி வரும் பழயகாலத்து மனுஷியாதலாலும் அவள் வார்த்தையைக் கேட்டதும், "கண்ணு! இதென்ன பீடிகை... உனக்காக நான் என் வயித்துலே பிறந்த பிள்ளையைக்கூட விட்டு விட்டு உன்னைக் காப்பாத்தறதாக உன் தாயாருக்கு நான் செய்த வாக்குதத்தத்தை மறப்பேனு!"

என்று கூறியதைக் கேட்ட சந்திராவுக்கு ஆச்சரியத்தால் தேகம் சிலிர்த்தது. 'என்ன! எனக்காக உன் பிள்ளையைவிட்டாயா?... அதெப்படி? எனக்குச் சொல்லவேயில்லையே!'...என்று வியப்புக் கடலாடியவாறு கேட்டாள்.

நாக:—உம்....அந்த கதெ இப்ப என்னத்துக்கு, அப்பறம் சொல்றேன். நீ என்னமோ சமாச்சாரம் சொன்னயே! அதைச் சொல்லம்மா!—என்றாள். சந்திராவுக்கு நிலைமையே தடுமாறுகிறது. "சொல்வதா! வேண்டாமா!" என்றும் தோன்றியது.

பிறகு சற்று சமாளித்துக்கொண்டு, "நாகு! இதோ இப்படிப் பாரு... அந்த மனிதரிடம் நீ எதுவும் பேசவே வேண்டாம். அவர் எங்கு போகிறார், எங்கிருக்கிறார் என்பதைமட்டும் தெரிந்து கொண்டுவந்து என்னிடம் சொல்லு. அவ்வளவுதான் விஷயம். நீ இந்த ரகஸியத்தை இறந்தாலும் வெளியிடக்கூடாது. தெரியுமா! என் தாயின்மீது ஆணை. இதை நீ வெளியிடாது செய்யவேண்டும்... அதோ அவர் போகிறார். நீ போ...போ...சீக்கிரம் போ"...என்று நாகுவை அனுப்பினாள்.

ஸ்ரீதரன் போகும் கண்றாவியை இவளால் கண்டு சகிக்கவே முடியவில்லை. அவள் பிறந்ததுமுதல் இதுவரையில் கண்டறியாத ஒரு சோகம்....அடங்காத ஆவல்...கூறத்திறமற்ற மனோ வேதனை... எல்லாம் ஒருங்கே சேர்ந்து அவளை வதைத்து வாட்டுகிறது. செயலற்றப் பதுமைபோல் சாய்ந்தாள். கண்ணீரோ, அணைகடந்த வெள்ளம்போல் ஓடுகிறது.

## 20

சங்கீதத்தில் மகா மோகங்கொண்டுள்ள சந்திராவுக்கு அதைத் தூண்டிவிடுவதுபோல் பக்கத்துவீட்டு ராஜாயியின் அற்புதமான சங்கீதம் அமைந்தது. சங்கீதத்திலுள்ள ஆவல் ராஜாயி ஒரு சாதாரண தாசி என்கிற வரம்பைக்கூட கடக்கச்செய்து அவளிடம் பேசவும் சங்கீதம் கேட்கவும் ஆசை உண்டாகியதால் சந்திரா இந்த வீட்டிலிருந்தபடியே அவளிடம் பேசுவதும், ஜன்னல் அருகில் நின்று சங்கீதம் கேட்பதும், சில சமயம் ராஜாயியே இவளைக் கூப்பிட்டு இன்னும் யார்யாரோ சங்கீதம் பாடப்போவதைத் தெரிவித்துக் கேட்கச்சொல்வதும் கல்யாணியம்மாளுக்குச் சற்றும்பிடிக்கவேயில்லை. சொல்லவும் சற்று அஞ்சிகையாகவிருந்தது.

சங்கீதத்தின் ஆகர்ஷண சக்தி சந்திராவை இழுப்பதால் அதை விடமுடியவில்லை. சந்திராவின் வைர நெக்லேஸ் வெகு அழகான முறையில் செய்திருப்பதைக்கண்டு ராஜாயிக்கு அந்தமாதிரி செய்துகொள்ள மிகவும் ஆசை என்று பலதரம் சொல்லியிருக்கிறாள். இன்று சந்திரா முன்பு கூறப்பட்ட சம்பவத்திற்குப் பிறகு நாகுவை அனுப்பிவிட்டுப் படுத்திருக்கையில் ராஜாயி கூப்பிடும் குரல்கேட்டு தன்னை மெல்ல சமாளித்துக்கொண்டுபோனாள்.

ராஜாயி தோட்டத்துப்பக்கம் வந்து சந்திராவை நோக்கி "என்னம்மா! ஒருமாதிரி இருக்கிறாயே! உடம்பு சரியில்லையா ?" என்றாள்.

சந்:—ஆமாம். தலைவலி அதிகமாகவிருக்கிறது. உன் சங்கீதமாவது கேட்டால் சற்று ஆறுதலாகவிருக்குமென்று பார்த்தேன். அதுவும் இல்லை. இன்று காலைமுதல் நீ பாடவேயில்லையே! ஏன் ?

ராஜ:—இன்று எங்கள் வீட்டிற்கு விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள். நாளையதினம் எனக்குப் பிறந்தநாள். வருஷா வருஷம் வெகு சிறப்பாகச் செய்வது வழக்கம். அதற்காக எங்க சித்தி, அவள் பெண்கள் எல்லோரும் வந்திருக்கிறார்கள். எங்கள் ஊர் தட்டானையும் அழைத்து வந்திருக்கிறார்கள். உங்கள் வைர ஹாரத்தை மாதிரி பார்த்து எனக்குச் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். அதைச் சற்று காட்டமுடியுமா என்று கேட்பதற்கும், நாளையதினம் மஞ்சள் குங்குமத்திற்கு வரும்படி அழைப்பதற்கும் தான் கூப்பிட்டேன். என் பிறந்தநாளைக்கே செய்யவேண்டுமென்று பார்த்தும் முடியவில்லை. சற்று காட்டமுடியுமா !" என்றாள்.

இதைக் கேட்டவுடனே சந்திராவின் மனத்தில் ஏதேதோ யோசனைகள் அலைபோல் மோதின. அவள் சில விநாடிகள் ஆழ்ந்த எண்ணத்திலிருந்து ஒருவிதமான துணிவுடன் சட்டென்று விழித்தாள். இதனால் எது வந்தாலும் சரி, பகவான் இருக்கிறார் பார்த்துக் கொள்வோம்' என்கிற தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ராஜாயியின் முகத்தை ஏற இறங்கப்பார்த்தாள்.

183072

"ராஜாயீ ! இந்த வைர ஹாரத்தில் உனக்கு அத்தனை மோகம் இருக்கும்பக்ஷத்தில் இதையே நீ வாங்கிக்கொள்ளேன். நான் வேறு செய்துகொள்கிறேன். இதற்கென்ன பிரமாதம்? உங்கள் தட்டானிடமே காட்டி விலை மதிப்பிடச்சொல்லு. நாளை உன் பிறந்த நாளுக்கே போட்டுக்கொள். இதில் என்ன பிரமாதம் ?" என்றாள்.

இச் சொல்லைக்கேட்ட ராஜாயிக்கு சந்தோஷம் கரைகடந்தது. "இரு! இரு! என் தாயாரிடம் கேட்டுக்கொண்டு வருகிறேன்" என்று ஓடினாள். முதலில் சொல்லிவிட்டாளேயன்றி, "நான் பெரியவர்களுக்குத் தெரியாமல் இதுபரியந்தம் ஒரு தண்டா காரியமும் செய்ததில்லையே! இப்போது இத்தகைய பெரிய காரியத்தைத் திருட்டுத்தனமாகச் செய்வது நியாயமா! இது அம்மா அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்? நமது ரகஸியத்தைத் தெரிந்து வெறுத்தாலும் வெறுப்பார்கள். என்ன பதட்டமான யோசனை செய்துவிட்டோம். எதற்கும் பெற்றோரைக் கேட்காது ஒரு காரியமும் செய்வது தருமமில்லை. நீதியில்லை. அவர்கள் என்னிடம் வைத்துள்ள வாத்ஸல்யத்திற்கு நான் துரோகமே நினைத்தவளாவேன்...கொடுக்கமுடியாதென்று சொல்லிவிடுவோம். பகிரங்கமாக ஏதாவது உதவி செய்வதற்கு முடிந்தால் பார்ப்போம் இல்லையேல் அவரவர் தலைவிதிப்படி ஆகிறது" என்று மீண்டும் நினைத்தாள்.

ஸ்ரீதரனின் பரிதாபம் அவள் இதயத்தை வாட்டுகிறது. அதைச் சமாதானம் செய்யவேமுடியவில்லை. தத்தளிக்கும் சமயம் ராஜாயி ஓடிவந்து, "சந்திரா! எங்கள் தட்டான் எத்தனை மதித்தாலும் அத்தனை ரூபாயைக் கொடுத்து வாங்கிவிடுகிறேன் என்று எங்கம்மா சொல்கிருள். ஹாரத்தை சற்று தருகிருயா ?" என்றாள்.

சங்:—என்னுடைய பெற்றோருக்கு தந்தியடித்து அவர்களின் சம்மதத்தைத் தெரிந்துகொண்டு தருகிறேன். இது பெரிய காரியம் பாரு. நானகச் செய்துவிட்டால் அது சரியில்லை. ஆதலால் இப்போதே தந்தியடிக்கிறேன்" என்று கூறியனுப்பிவிட்டாள்.

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லவேண்டுமென்கிற பழமொழி சரியாகிவிடுகிறதல்லவா ?...தவித்துக்கொண்டிருக்கையில் நாகு வந்தாள். அவளை ஆவலுடன் நோக்கி, "நாகு!... பார்த்தாயா...எங்கிருக்கிருர் தெரிந்ததா !" என்று வெகு ஆத்திரத்துடன் கேட்டாள்.

நாகு:—பார்த்தேனம்மா ! ராமநாதன் தெருவில் 21-ம் நம்பர் வீட்டிற்குச்சென்றுர். அது யாருடைய வீடு என்று அக்கம்பக்கத்தில் விசாரித்தேன். அது ஒரு தேவடியாள் வீடு என்று இழிவாகவும் கேவலமாகவும் சொன்னார்கள்.

சங்:—என்ன ! தேவடியாள் வீடா ?...உண்மையிலா !...

நாகு:—ஆமாம் குழந்தை! தேவடியாள் வீடுதானும். இந்தய்யா உள்ளேபோன சற்று நேரத்திற்கெல்லாம் மோட்டாரில் நாலைந்து ஆண்களும் பெண்களும் வந்திறங்கி உள்ளே சென்றுர்கள். அழகு தெய்வம் என்றுல் மிகையாகாது. அத்தகைய சுந்தராங்கி இவர்களை வரவேற்றுள். என் கண்ணுல் கண்டேன். அடுத்த நிமிஷமே தேவகானத்திற்கு ஒப்பாக மதுரகானம் ஆரம்பமாகியது. அதையும் கேட்டுவிட்டுத்தான் வந்தேன்.

இந்த வார்த்தைகள் சந்திராவின் இதயத்தில் வேல் பாய்வது போல் வேதனை செய்கிறது. ஸ்ரீதரனு தேவடியாள் வீட்டில் கால் வைப்பவர் !...அவர் மகா பரிசுத்தராயிற்றே ! ஆபாஸம் என்பது அவருக்குப் பிடிக்கவேபிடிக்காதே ! அவர் எதற்காக அங்கு போக வேண்டும்...என்கிற அபாரமான சந்தேகங்களும் மனக்குழப்பமும் உண்டாகிய சந்திரா "நாகு ! நீ பார்த்தது அதே மனிதர்தானு ! வேறு யாரையாவது பார்த்து ஏமாந்துவிட்டாயா ?" என்றாள்.

நாகு:—இல்லையம்மா ! நீ காட்டிய அதே மனிதன்தான் அந்த வீட்டிற்குள் நுழையும்போது நன்றாகப் பார்த்தேன்...குழந்தாய் ! நான் கேட்கிறேனென்று கோபிக்காதே ! அந்த வாலிபன் யாரு. அவனிடத்தில் உனக்கு இத்தனை அக்கரை விழுவதற்கு என்ன காரணம் ? ஒருவேளை அவரை நீ...என்று மேலே சட்டென்று சொல்லமுடியாது இழுத்தாள்.

சந்திராவுக்கு ஒன்றுமே சொல்லமுடியவில்லை. "என் பெற்றோருக்குக்கூட தெரியாத ரகஸியத்தை வேலைக்காரியிடம் முதல் முதல் சொல்வதா! பிறகு அவர்கள் என்ன நினைப்பார்கள். அதோடு ஸ்ரீதரன் தற்போதுள்ள நிலைமையில் அவனைத் தான் நேசிப்பதாகச் சொன்னால்கூட பரிகஸிப்பதோடு வீட்டுத் தகாரில் அவர்கள் மீதுள்ள கோபத்தினால் வீண் மனஸ்தாபமாகவன்றோ முடியும். என்ன செய்வது. இத்தகைய சமயத்தில் அவருக்கு உதவிசெய்யாத நாம் இருந்து என்ன உபயோகம்?" என்று மனது தத்தளிக்கின்றது.

## 21

"இந்திரா! உன் சகோதரியைப் பிரிந்து ஒருமாதகாலமாகிறது. நீ எப்படியோ, அவளை நினைக்காமலேயே வெகு தெம்பாக இருக்கிறாயே! சந்திரா வெறும் சீக்காளிபோல் மெலிந்துவிட்டாளாம். எத்தனைவிதத்தில் அவளை உத்ஸாகப்படுத்த முயன்றாலும் உபயோகமே இல்லையாம். சந்தோஷம் என்பதை அவனிடம் காணவே முடியவில்லையாம். இந்திராவைப் பிரிந்திருப்பதால் இந்த ஏக்கம் இருக்குமோ! என்று சந்தேகமாயிருக்கிறதாம். முகத்தில் சிரிப்பு என்பதே இல்லையாம். சதா ஏதோ எழுதுகிறாளாம். படிக்கிறாளாம். அடுத்த வீட்டில் யாரோ பாடும் சங்கீதத்தைக் கேட்டு சற்று ஆனந்தமடைகிறாளாம். எதனால் இப்படியிருக்கிறாளென்று கண்டு பிடிக்கவேமுடியவில்லையாம், என்றுமிகவும் வருத்தத்துடன் உங்க ஸாரநாதன்எழுதியிருக்கிறான். கல்யாணமாகும்வரையில்படுக்கைகூட ஒன்றாகவே இருந்த நீயும் அவளும் இம்மாதிரி எவ்வாறு பிரிந்திருக்கிறீர்கள்? உனக்கும் அவளுக்கும் ஏதாவது மனஸ்தாபமா! அல்லது நான் இங்கிருக்கிறேன் என்று அவளாகவே போய்விட்டாளா! எனக்கொன்றுமே புரியவில்லை. ஊருக்குப் போவதற்குமுன்பே என்னிடம் பேசுவதை நிறுத்திவிட்டாள். என்ன மர்மம் இருக்கும்?" என்று சேகர் ஒருவிதமான ஏக்கத்துடன் கேட்டான்.

இந்திரா என்ன பதில் சொல்வதென்று தெரியாது திகைத்தாள். தன்மீது ஒரு சிறிதும் குற்றமில்லாது அவன் வார்த்தையைக்கொண்டே மடக்கிவிடவேண்டும் என்று எண்ணி முகத்தை யொருவாறு வைத்துக்கொண்டு, "எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. உங்களைக் கண்டால் அவளுக்குப் பிடிக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். நீங்கள் இங்கேயே இருந்துவிடப் போகிறீர்கள் என்பதை அறிந்தவுடனே அவள் போனதிலிருந்து இதுதான் தோன்றுகிறது. எனக்கும் அவளுக்கும் ஒருவிதமான மனஸ்தாபமும் இல்லை. ஒருவேளை, தான் சிறந்த பணக்காரி என்கிற

கர்வத்தில் நம்மையெல்லாம் அவளுடைய வேலைக்காரர் என்றுகூட நினைக்கலாம்....என்று இழுத்தாள்.

"கரைப்பார் கரைத்தால் கல்லுங்கரையும்" என்கிற பழமொழி பொய்யாகுமா! 'ஒருகால்அப்படித்தான் இருக்குமோ! என்னவோ!' என்றுகூட சேகருக்குத் தோன்றியது. எனினும் சந்திராவின் குழந்தை உள்ளத்தில் இம்மாதிரி கடும்புயல் போன்ற காற்றும் கல் மஷமும் ஒருபோதும் இருக்காது" என்றும் எண்ணினான். இந்த விஷயம் ஒருவருக்கும் விளங்காத பெரிய மர்மமாகவேதோன்றியது.

எத்தகைய மனிதரிடமும் ஒரு மர்மமோ, குறையோ இதயக் கடலில் புதைந்துதான் கிடக்கும். அதைப் பிறர் அறியும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது சிலருக்கு வெளியாகிறது. சிலருக்கோ, ஆயு ளுடன் அதுவும் முடிகிறது. இதுதான் உலகத்தின் தத்துவம். அதே போல் சந்திராவின் மனத்துள் புதைந்து கிடக்கும் ரகஸியத்தை யாரால்தான் அறியக்கூடும்?

எத்தனை நேரந்தான் சந்திரா கண்ணீர் வழியப் படுத்திருந் தாளோ! அவளுக்கே தெரியாது. ஸ்ரீதரன் எங்கு போய்விடுவானோ! என்ன ஆபத்து நிகழ்ந்துவிடுமோ! என்று எண்ணும்போது அப் படியே பூமிதேவி வெடித்துத் தன்னை விழுங்கிவிடக்கூடாதா" என்றும் தோன்றியது.

அவளுடைய வேதனையை யாரிடம் கூறி ஆறுதலடையமுடியும்? சொன்னால்தான் ஏதாவது பரிகாரம் உண்டா! என்று குமுறுகிறாள். தத்தளிக்கும் நிலைமையில் நாட்கள் நிற்குமா! அன்று சென்ல மறு நாளும் போய்விட்டது. ஸ்ரீதரன் அந்த ஊரில்தானிருக்கிறானோ! என்ன செய்தானோ! என்கிற அபாரமான கவலையால் நாகுவை அழைத்து, "நாகு! நீ இன்று தைரியமாக அன்று பார்த்த தேவடி யாள் வீட்டிற்குச் சென்று "ஸ்ரீதரன் என்பவன் இங்கு வந்திருக் கிறாரா!" என்று சற்று விசாரித்துக்கொண்டு வாயேன்" என்றாள்.

அப்படியே நாகம்மாள் சென்று விசாரித்துக்கொண்டு வந்து "அம்மா! அந்த வீட்டில் அன்று அத்தனை பேர்கள் இருந்தார்கள். இன்று 'வீடு வாடகைக்கு விடப்படும்' என்கிற போர்டு தொங்கு கிறது. அக்கம்பக்கத்தில் இன்று விசாரித்தபோது ஒரு தேவடியாள் சினிமா கம்பெனி முதலாளியாம். ஆறுமாதகாலமாக அந்த வீட்டில் குடியிருந்தாளாம். நேற்று வேறு ஊருக்குக் காலி செய்துகொண்டு போய்விட்டார்களாம்.

ஒருவாய் தண்ணீருக்காக மரண தாகத்துடன் காத்திருக்கும் ஒருவனுக்கு வெறும் செம்பைக் காட்டினால் எப்படியிருக்கும்? அதேகதியைத்தான் சந்திராவின் உள்ளம்அடைந்தது "என்ன! சினி மாக்கார தேவடியாள் அந்த வீட்டிலிருந்தாளா! அந்த வீடா காலி யாகியிருக்கிறது. அவரைப்பற்றித் தகவலே இல்லையா! ஐயோ! "கைக்கெட்டியதும் வாய்க்கெட்டவில்லையே!" என் துரதிருஷ்டமா இப்படி ஒரு நாடகமாய் முடிந்தது? அவருடைய ஆபத்தான சம

யத்தில் யோசனை செய்யாமல் என்னுடைய வைரஹாரத்தைக் கழட்டிக்கொடுக்காமல்போன நானு பிரேமைக்குப் பாத்திரமானவள்! இல்லை; இல்லை. பிரேமைக்கு அருகதையற்ற வெறும் கட்டை... அவருடைய ஆனந்த நிலயத்தை அவர் மனம் கொதிக்கும்படி நானே வாங்கிக்கொண்டு மனமகிழும் துரோகம் ஒன்றே அவருடைய மனத்தில் அனல்போல் எரிந்திருக்கும், என்ன -செய்வேன்?".... என்று துடித்தாள். கண்ணீர் ஆறாய் பெருகவிட்டுக் கதறினாள்.

இனி எப்போது அவரைப் பார்ப்போம் என்கிற பெரிய ஏக்கம் அவளைக் கொன்று தின்னுகிறது. கடனுக்காக ஏதாவது பதில் சொன்னாரா! இல்லையா! என்பதைச் சித்தப்பாவிடம் கேட்டுப் பார்த்தால் ஒரு வேளை விஷயத்தைப் புரிந்துகொள்ளலாம் என்கிற ஒரு நம்பிக்கை ஏற்பட்டதால் தனது விசனங்களையெல்லாம் ஒருவாறு அடக்கிக்கொண்டு ஒருநாளுமின்றி திருநாளைப்போல் சித்தப்பா பேப்பர் படிக்கும் இடத்திற்கு வலுவில் தானாகப்போய் உட்கார்ந்து'பத்திரிகையில் ஏதாவதுவிசேஷமுண்டாசித்தப்பா!'என்றாள்.

சித்த:—ஊம்...விசேஷமில்லை; ஒன்றுமில்லை. என்னமோ உபயோகமற்ற சமாச்சாரங்கள் வருகின்றன. பொழுதுபோக்கிற்கு எதையோ ஒன்று படித்தாகவேண்டும். நாவல்களில் வருவதுபோல், அங்கு கொலை, இங்கு தற்கொலை என்று வந்திருக்கிறது. எவனோ ஒரு பாவி கடன்காரன் வாயில் மண்ணைப் போட்டுவிட்டுக் கடனுக்காக தற்கொலை புரிந்துகொண்டு செத்தானாம்....

இந்த வார்த்தையைக் கேட்கும்போதே சந்திராவின் வயிற்றில் பகீர் என்றது....தனது மாறுதல்களை வெகு பிரயாசைப்பட்டு அடக்கிக்கொண்டு மீண்டும் பேசத்தொடங்கி, "என்ன! தற்கொலையா! வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்கவா தற்கொலை செய்துகொண்டான்! யார் அந்த பிரகஸ்பதி...ஆமாம்...உங்களுக்கு யாரோ பணம் கொடுக்கவேண்டுமென்று அன்று நீங்களும் சித்தியம்மாவும் இறைந்துகொண்டிருந்தீர்களே, அவன் வந்துவிட்டானா! இன்னமும் நாமந்தானா?" என்று நைஸாகக்கேட்டாள்.

சித்:—நாமம் போடுவதற்கு நான் விடுகிறேனா! அவன் மானததை வாங்கிவிடமாட்டேனா! அதோடு அவர்கள் அத்தனை அல்கா இல்லை. நல்ல உயர்ந்த மனிதர்கள். ஏதோ கால வித்யாசத்தால் கடன்காரராகிவிட்டார்கள் அப்போதுகூட என்னிடம் தன் சொந்த செலவுக்காக தம்பிடிகூட வாங்கவில்லை. சினேகிதனுக்குக் கூட்டுக் கையெழுத்து போட்டான்; அது அவன் தலையில் விடிந்தது. நானும் இத்தனை வருஷங்கள் பொறுத்தேன். பணம் தர்ப்பணமாகிவிட்டால் என்ன செய்வது? நான் செய்த கடிபிடியில் மறுநாளே பணத்தை முழுதும் வட்டியும் அசலுமாகக் கொடுத்துவிட்டுப் பத்திரத்தையும் கிழித்தாயிற்று. உனக்காகவே அந்த பணத்தை அத்தனை அவசரப்படுத்தி வாங்கினேன். பட்டணத்திற்கு ஸாரநாதன் இன்று

போகிறன். நாளையே நல்ல பஸ்டுக்ளாஸ் மோட்டாருடன் வரு வான்...நீ ஆனந்தமாக அதில் உன்னிஷ்டபடி ட்ரைவ்போகலாம்...

அவர் சொல்லிய வார்த்தைகளின் பின் பாகமெல்லாம் சந் திராவின் காதில் விழுவேயில்லை. கடனைத் திருப்பிக்கொடுத்தாகி விட்டது என்ற வார்த்தைகளைக் கேட்டதும் அவள் இதயத்தில் கூறத்திறமற்ற ஒரு உணர்ச்சி பொங்கியது. "பணத்தைக் கொடுத்து விட்டாரா...எப்படிக் கொடுத்தாரோ! இன்னும் யாரிடம் கடன் வாங்கினரோ! அன்று அவர் கேட்ட வசை மொழிகளைச் சகியாது தனது கடனைத்தீர்த்துவிட்டது வியப்பிலும் வியப்பாகவன்றே இருக் கிறது...உம்....எல்லாம் அவன் செயல்" என்று பெருமூச்சுவிட்டாள்.

அதற்குமேல் அங்கிருக்கப் பிடிக்கவில்லை. மெல்ல ஏதோ சாக்குச் சொல்லிக்கொண்டு உள்ளே போய்விட்டாள். தாமரை யிலைத் தண்ணீர்போல் தத்தளிக்கும் மனத்திற்கு சாந்தி ஏது? சந் துஷ்டி ஏது?..."எனக்காக என் அன்பரின் உயிரைத் துடிக்கவைத்துப் பணத்தைக் கக்க வைத்து அப்பணத்தினல் மோட்டார் வாங்கி அதில் நான் ஏறி உல்லாஸமாக ஊர் சுற்றுவதா! என் சந்தோஷம் அந்த மோட்டாரினலா பெருகப்போகிறது. நான் மனம் வைத்தால் பத்து மோட்டார்கள் வாங்கி தானம்கூடச் செய்யலாமே! என்னுருயிர் ஸ்ரீதானுடன் நான் காரில் சென்றால் என் இதயம் சந்தோஷச் சிக ரத்தை எட்டுமேயன்றி இப்படியா என் மனம் மகிழும்? அந்த பணத்தைத் திருப்பிக்கொடுக்க அவர் என்ன பாடுபட்டிருப்பாரோ, ஆண்டவனுக்கே வெளிச்சம். அவர் வீட்டை நான் வாங்கிச் சந் தோஷப்படுவதுபோதாமல் அவர் பணத்தினல் மோட்டாரும் எனக் காகவே வாங்கி களிக்கவேண்டுமா! ஹா இதென்ன சோதனையோ! இந்தமாதிரி சம்பவங்களைக் கண்டால் எனக்கேதோ பயமாகவும் திகிலாகவும் தோன்றுகிறதே! என் மனக்கோட்டை முழுவதும் இடிந்துவிடுமோ? என் சந்தோஷக் கப்பல் உடைந்துவிடுமோ!" என்று எண்ணுகயும் எண்ணித் தவிக்கிறள். 'இனி இவர்களிடம் பேமானி என்றும், மோசக்காரனென்றும் வசையை அவர் வாங்க மாட்டார் அல்லவா! என்னுடைய சந்தோஷத்திற்கு மோட்டார் வாங்கும்பொருட்டல்லவா அவர் அத்தகைய வார்த்தைகளைக் கேட்க நேர்ந்தது. அந்த பாதகம்முற்றும் என்னைச் சேர்ந்ததல்லவா?' என்கிற துக்கம் அவள் நெஞ்சில் பெரும்பாறையைப்போல் அழுத்தியது.

## 22

"பெரியம்மா! சந்திராவின் சந்தோஷத்திற்காகவே இப் போது கார் வாங்கிவிட்டேன். அதில் முதல்முதல் நீயும் பெரியப்பாவும் ஏறிக்கொள்ளவேண்டும். இன்று முகூர்த்த நாளாம். புறப்படு. அதோ பெரியப்பாவும் வந்துவிட்டார்" என்று ஸாரநாதன் கூப்பிட்டான்.

அமிருதவல்லியம்மாளின் சந்தோஷம் கரைபுரண்டது. எப்படியாவது சந்திராவுக்கும் ஸாரநாதனுக்கும் விவாகமாகித் தான் கண்குளிரப்பார்த்தால்போதும்என்று உள்ளூறத்தோன்றியது.'குழந்தாய்! உன்னுடைய அன்பு எத்தனை உச்சத்திலிருக்கிறதென்பதை முன்பே அறிந்தேன். இப்போது இன்னும் தெளிவாகிவிட்டது. சந்திரா உன்னுடன் சகஜமாகப் பேசிக்கொண்டிருக்கிருளா?' என்ருள்.

ஸார:—சந்திராவின் போக்கே ஒரு தனித்ததாக இருக்கிறது. சந்தோஷமோ, உத்ஸாகமோ, சுறுசுறுப்போ ஒன்றுமே இல்லாது அவள் முகத்தில் சதா ஒருவிதமான ஏக்கமும் விசனமும் குடிகொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் இந்திராவின் பிரிவுதான் இருக்கவேண்டுமென்று அம்மா சொல்கிருள். அதிலும் இப்போது ஒருவாரமாக அவள் சாப்பிடுவதுமில்லை. தூங்குவதுமில்லை. சதா புலம்புகிருள். கார் வாங்கிவிட்டால் அவளிஷ்டம்போல் சுற்றிஞல் சற்று ஆறுதலாகுமோ என்றுதான் உடனே வாங்கினேன். நேரமாயிற்று; வா போகலாம்—என்ருன்.

நல்ல வேளையில் அமிருதவல்லியம்மாளையும் அவள் கணவரையும் காரில் உட்காரச் செய்து ஊரை ஒரு சுற்று சுற்றினன். பிறகு அவர்களை இறக்கிவிட்டு தான் காருடன் நேராகக் கிளம்பினன்.

ஸாரநாதனின் இதயக் கடலில் பற்பல எண்ணங்கள் அலைபோல் மோதியடிக்கின்றன. "சந்திராவுக்குள்ள சகல ஏக்கமும் காரைப் பார்த்தவுடனே தீர்ந்துவிடும்; தினம் அவளுடன் அனேக இடங்களுக்குக் காரில் சென்று இன்பமாக உலாவி வாலாம் அதில் அவளுடைய பிரேமை பூராவும் பெற்றுவிடலாம். அண்ணு வென்று கூப்பிடக்கூடாது என்கிற தனது அந்தரங்கத்தைத் தனிமையில் தெரிவித்துவிடவேண்டும்" என்றெல்லாம் ஸாரநாதன் தனக்குள் எண்ணியபடியே வந்தான்.

அன்று மாலையே கார் 'பும் பும்' என்று சந்தோஷ ஆரவாரம் செய்வதுபோல் ஹாரனடித்துக்கொண்டு வீதியில் வந்து நின்றது. இந்த ஹாரனைக் கேட்ட கல்யாணியம்மாளும் அவள் கணவரும் உள்ளம் பூரித்து ஒரு புதிய சந்தோஷ உணர்ச்சியுடன் வாசலில் ஓடி வந்து ஆனந்தப் பூரிதர்களாய்ப் பார்த்தார்கள்.

கம்பீரமாக ஸாரநாதன் காரில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு இப்படியே சந்திராவுடன்கூட கல்யாண ஊர்கோலமாய் அமரவேண்டும் என்று உள்ளம் விரும்பி வாழ்த்தியது. தன் மகனுக்கு எங்கே திருஷ்டி வந்துவிடுமோ என்று எண்ணி திருஷ்டிகழித்தாள்.

இதே ஹாரன் 'பும் பும்' என்று சந்திராவின் காதில் கேட்டதும் அவள் வயிற்றில் கூறத் திறமற்ற சங்கடம் செய்துக் கலக்கியது. இந்த மோட்டாரின் ஹாரன் சப்தம் ஸ்ரீதரனின் இதயத் துடிப்பின் வேகத்தில் உண்டாகும் பெருமூச்சுபோல் தோன்றியது. "அவரை வசை பாணத்தால் வதைத்துக் கண்ணீர் பெருகக்

கொடுத்த பணத்தின் பிரதிபிம்பமான இக்காரில் ஏறுவதா!'' என்று நினைக்கும்போது தருமசங்கடமாகியது.

அதே நிமிஷம் கல்யாணியம்மாளும் ஸாரநாதனும் ஆவலே வடிவாக உள்ளே வந்து, "சந்திரா! உனக்காக கார் வாங்கிவிட்டேன். எழுந்து வந்து முதல் முதல் நீயே ஓட்டு. நாங்கள்கூட அமருகிறோம்'' என்று கூப்பிட்டார்கள்.

இந்த தர்மசங்கடமான நிலைமையில் என்ன செய்வாள் பாவம்! இவர்கள் மனம் கோண நடந்தாலோ, தன் பேரில் உயிரையே வைத்து வாத்ஸல்யத்துடன் வளர்க்கும் பெற்றோருக்கு மனக் கசப்பாகிவிடும். என்னவிருப்பினும் உடன்பிறந்த சகோதரியல்லவா! அந்த பாசத்தைத் தடைகட்ட முடியுமா! என்று நினைக்கும்போது இவர்களுக்குக் குறுக்கு சொல்லமுடியவில்லை. காரில் ஏறவும் மனது கலங்குகிறது. சிறிதுநேரம் தியங்கினாள்.

"நீ இப்படித் தியங்குவது சரியில்லை. உன்னைப் பெற்ற தாயைவிட அதிகமாக நேசிக்கும் அமிருதவல்லியம்மாளின் மனத்தைப் புண் படுத்தாதே! தனக்கென்று இல்லை யெனினும் பிறருக்காக வாவது கூட்டுக் கையொப்பமிட்டுக் கடன் ஏன் வாங்கினான்? வாங்கிய கடனைத் திருப்பித் தராதிருப்பதுஅநியாயமல்லவா! அதைக் கொடுப்பதுதானே நீதி! அதற்கு நீ ஏன் கவலைப்படுகிறாய்?'' என்று அவளுடைய மனச் சாட்சியே குத்திக் காட்டியது.

ஒருவாறு சமாதானம் செய்துகொண்டு வாசலுக்கு எழுந்து வந்தாள். கார் புதிய மாடலில் அவளுக்கு மிகவும் பிடித்தமான பச்சைக் கலரில் வெகு அழகாக இருந்ததைக் கண்டு ஒரு பெருமூச்சுவிட்டாள். தனது முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்துக் கொண்டு, "பேஷ்! கார் வெகு ஜோராயிருக்கிறதே! எங்கள் காரைவிட இது முதல் தரமானது. சித்தியா!...சித்திம்மா! அண்ணா! ஏறுங்கள். நான் ட்ரைவ் செய்கிறேன்'' என்று கூறி முதலில் ஏறி உட்கார்ந்தாள். அவள் பக்கத்து ஸீட்டிலேயே ஸாரநாதன் உட்கார்ந்தான். அவனுடைய இதயத்தில் கொந்தளிக்கும் ஆனந்தத்தைச் சொல்லில் அடக்கவே முடியாது.

கல்யாணியம்மாள் தம்பதிகள் உள்ளே உட்கார்ந்தார்கள். அவர்களுடைய சந்தோஷம் எப்படி இருக்கும் என்று கூறவேண்டுமா? அவர்களுடைய முகத்தில் தாண்டவமாடும் சிரிப்பே அதற்கு அத்தாக்ஷி. சொந்த காரில் செல்வதென்றால் யாருக்குத்தான் தனித்த இன்பம் தேன்போல் சுறக்காது?

காருக்கு மஞ்சள், குங்குமம் புஷ்பம் முதலியவற்றால் அலங்காரம் செய்திருப்பதும் அதில் த்ருஷ்டியாகிவிடும்போல் சந்திராவே ஓட்ட உட்கார்ந்திருப்பதும் ஊர் ஜனங்களின் மனத்தில் ஒரு புதிய காக்ஷியாய்த் தோன்றி பெரிய புரட்சியையும் உண்டு பண்ணியது. "ஸாரநாதனின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். கார் எத்தனை அழகாக இருக்கிறது. அதற்குமேல் தேவகன்னிகையே உட்கார்ந்திருப்பது

போல் சந்திராவின் தோற்றம் தூக்கி யடிக்கிறது. என்ன ஜோடி! என்ன ஜோடி! இதெல்லாம் கல்யாணியம்மாளின் பாக்யந்தான்.... பெண்பிள்ளை ஆண்பிள்ளையைப்போல் வண்டி ஓட்டுகிறளே!"...

என்று ஜனங்கள் வியப்புடன் காரைச் சுற்றிக்கொண்டார்கள். சந்திராவுக்கு உத்ஸாகமில்லையெனினும் தன் தாயார் அமிருதவல்லியம்மாளுக்காக உத்ஸாகத்தை வரவழைத்துக்கொண்டு காரையும் 'பும் பும்' என்று ஹாரன் செய்தவாறு ஓட்டவாரம்பித்தாள். அடுத்த நிமிடமே கார் அத் தெருவை தாண்டிச் சென்றது.

சந்திரா கார் ஓட்டும் அழகைப் பார்த்து ஸாரநாதன் அப்படியே பூரித்துப் போய் சந்திராவின் சந்திர வதனத்தின் சோபையிலீடுபட்டுத் தன்னையே மறந்தான். சந்திராவுக்கு அவ்வூர் புதியதாகையால் தான் எங்கு செல்லவேண்டுமென்று தெரியாததால், "அண்ணு! எனக்கு ஊர் புதியதாகையால் எங்கு போகவேண்டுமென்று வழியைச் சொல்லுங்கள். போகிறேன்" என்றுள்.

கல்யாணியம்மாளும் பொங்கும் ஆனந்தத்துடன், "அம்மா! சந்திரா! முதல் முதல் காரில் ஏறினதும் கோயிலுக்குத்தான் போகவேண்டும். பக்தவத்ஸலப் பெருமாள் கோயில் இன்னும் ஒரு மைல் தூரத்திலிருக்கிறது. அங்கு போகலாம். அம்பி! கோயிலுக்கு வழி காட்டு" என்றுள். அப்போது நன்றாக அஸ்தமிக்கும் சமயமாகிவிட்டது. வீதியில் ஜன நடமாட்டம் அதிகமாயிருந்ததால் சற்று நிதானமாயும் அடிக்கடி ஹாரன் கொடுத்துக்கொண்டும் சந்திரா கார் விடுவதை வீதியிலிருக்கும் ஜனங்கள் அத்தனை பேரும் விநோதமாகப் பார்த்தார்கள்.

சந்திராவின் மனத்தில் தனது ஸ்ரீதரனுக்கு மகத்தான தீங்கு செய்துவிட்டதுபோலும் அந்த பாதகம் தன்னைத் தாக்கும் என்றும் ஒரு எண்ணம் போராடிக்கொண்டிருந்தது. மோட்டார் ஒரு எந்திரம், அந்த எந்திரத்தை ஓட்டும் மற்றொரு எந்திரமாய் சந்திரா அமைந்தாளேயன்றி அவளுடைய உணர்ச்சி அவளிடமில்லை.

கோயிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்யும்போது சந்திராவையே தனக்கு மனைவியாய் அருளவேண்டுமென்று மகனும், சந்திராவைத் தமக்கு மருமகளாக அளிக்கவேண்டுமென்று பெற்றோர்களும் பிரார்த்தனை செய்தார்கள்.

ஆனல் சந்திராவின் உள்ளம் என்ன நினைத்தது? "என் அன்பருக்கு யாதொரு குறைவும் இன்றி சுகமாக வாழச் செய்யவேண்டும். வெகு சீக்கிரத்தில் மறுபடியும் அந்த சுந்தர வதனத்தைச் சந்தோஷத்துடன் கண்டுகளிக்கச் செய்யவேண்டும். என்னிதயம் அந்த தரிசனமிருதத்திற்காகக் காத்திருக்கும் ஆவலைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்றெல்லாம் பிரார்த்தனை செய்தது. தான் சற்று முன்னடியே காரில் வந்து உட்கார்ந்துவிட்டாள்.

இதையறிந்த சாரநாதனும் கூடவே வந்து அமர்ந்தான். அவனுடைய இதயத்தில் கொந்தளிக்கும் காதல் ஜ்வாலை முகத்தில் விக

சிதமாகி ஜ்வலிக்கின்றது. சந்திராவைத் தான் இன்றே அடைந்து விட்டது போன்றும் ஒரு மன எழுச்சி உண்டாகியது.

அருகில் வந்து உட்கார்ந்தவனைக் கண்டு பேசாதிருந்தால் என்ன நினைப்பானோ! என்று எண்ணி "அம்மா அப்பா இருவரும் எங்கே அண்ணா இன்னும் வரவில்லையே!" என்றாள்.

அதுகாறும் பொறுமையுடனிருந்த ஸாரநாதன், "சந்திரா! என் மீது கோபிக்காதே! நீ இன்னமும் குழந்தையல்ல. உலகானுபவத்தை யறிந்து நடக்கும் வயதாகியவளேயாகும். என்னை நீ அண்ணாவென்று கூப்பிடும்போது என் தேகம் முற்றும் முள்ளு குத்துவதுபோலிருக்கிறது. என்னுள்ளத்தில் கட்டுமீறிக் கொந்தளிக்கும் பிரேமை வெள்ளத்தை நீ அறியவில்லைபோலும். உன்னை என்னுயிரினும் மேலான மாணிக்கம்போல் கருதுகிறேன். உன்மீது நான் அளவிலடங்காத பிரேமை கொண்டு தவிக்கிறேன். உன்னை என்று உலகோரறிய மணம் செய்துகொள்ளப்போகிறோம் என்று உருகுகிறேன்.

சந்திரா! என் ஆவலை இந்த பக்தவத்ஸலன்தான் பூர்த்தி செய்ய வேண்டும். இனி நீ அண்ணா என்று அழைப்பதை விட்டுவிடு. "ஸாரநாத்" என்று பெயரைக் கூப்பிட்டால்கூட என் மனம் அமிருதம் பருகியதுபோலாகும். "நீ என் பிரேமை ராணி! அன்பின்சிகரம், இன்பஜோதி, என் உணர்ச்சிவெள்ளம்...என் மகிழ்ச்சியின் உதயம், என் சந்தோஷத்தில் பூத்த சந்தோஷ மலர், என் காதலின் கனி, நீயே எனக்கு அமிருததாரை. என் பிணிக்கு நீயே ஜெயஸஞ்சீவி. நீயே என் பிரேமையின் பிரபை. நீயே என் ஆனந்த ஸாகர், நீயே எங்கள் குலத்தின் சுடர்விளக்கு."

என்று பித்துபிடித்தவன்போல் ஸாரநாதன் சொல்லிக் கொண்டே போவதைக் கேட்டு சந்திராவின் சந்தேகம் நிவர்த்தியாகியதோடு பகீரென்று மனம் இடிந்தது. அவளை அறியாமலேயே ஒரு சோகச் சிரிப்புகளுக்கென்று வெளிப்பட்டது. பதில் ஒன்றுமே பேசவில்லை. "என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்ட என்னருமை ஸ்ரீதரனையின்றி இனி இந்த ஜென்மத்தில் இந்த இதயத்தில் மற்றொருவருக்கு இடம் உண்டா! இல்லை; இல்லை. சத்தியமாக இல்லை" என்று தானே எண்ணி ஒரு பெருமூச்சுவிட்டாள். ஸாரநாதனது பிரேமையின் ஆவேசம் அவளது கடினமான இதயத்தை அசைக்கவே இல்லை. அது தனது உறுதியிலேயே நின்றது.

## 23

சேகர் இருக்கவேண்டிய மூன்று மாதங்கள் முடிந்தன. அதன் பிறகு அவனை வட இந்தியாவிற்கு மாற்றினார்கள். அவன் குடும்ப சகிதம் வட இந்தியாவுக்குப் பிரயாணமானான். ஆனால் சந்திராவை, ஊருக்குப் போவதற்கு முன்புகூட தன் மனைவி பார்க்க

வேண்டுமென்று விரும்பித்தானும் போகாமல் அவளையும் வரவழைக்காமல் இருப்பது சேகருக்கு மிகவும் மர்மமாகவே இருந்தது.

சேக:—இந்திரா! நாளைக்காலையில் நாம் புறப்படவேண்டும். தயார்தானே...

இந்தி:—ஓ! சகல ஏற்பாடுகளும் ஆகிவிட்டன. உங்கள் பெற்றோர்களுக்குத் தந்தியடித்துவிட்டீர்களா!

சேக:—ஆயிற்று; அவர்கள் அப்படியே வந்து கலந்துகொள்வார்கள். அதிருக்கட்டும். வட இந்தியாவுக்குப் போய்விட்டால் மூன்று வருஷங்களுக்கு வேறு இடம் மாற்றமாட்டார்கள். எப்போது வருவோமோ! என்னவோ! நீ உன் தங்கையைப் பார்க்கவே வேண்டாமா! அவளைப் பார்க்காமலா போகப்போகிறாய்?

இக் கேள்வி இந்திராவைத் தூக்கிவாரிப்போட்டது. தான் அவளைப் பார்க்கவேண்டுமென்கிற ரகஸியத்தை ஒளித்து நான் பார்க்க வேண்டுமென்கிற சாக்கை வைத்துப் பேசுவதாகவே இந்திராவின் மனத்தில் பட்டது. தான் போவதற்கும் மனது விரும்பவில்லை. ஒப்புக்காகப் போவதாகக் கிளம்பினாலும் அவரும் கூட வருவார். அது சற்றும் பிடிக்கவில்லையாதலால் சற்று தயங்கியபின்... "பார்க்கக்கூடாது; வேண்டாம் என்றுகூடத் தோன்றுமா! அவள் தான் உடம்பு சரியில்லாது மருந்து சாப்பிடப்போயிருக்கிறாள். நான் போய், வெகுதூர தேசம் போய்விடுவதைக் கூறினால் பிரிவின் உணர்ச்சியால் உடம்பு அதிரும், அழுவாள். இன்னும் உடம்பு அதிகமாய்விட்டால் என்ன செய்வது. அவளுக்கு ஏதாவது வந்தால் அப்பாவும் அம்மாவும் சோகத்தால் வாடிவிடுவார்கள். அதனால்தான் யோசிக்கிறேன். கடிதம் எழுதிவிடலாம் என்று தீர்மானித்துவிட்டேன்" என்றாள்.

இந்த சமாதானம் சேகருக்கு சற்றும் திருப்தி உண்டாக்கவே இல்லை. எப்படியாவது இவர்களிருவருக்குமுள்ள ரகஸியத்தைஅறிய வேண்டுமென்று ஒரு தீவிரமான எண்ணம் உண்டாகியது..."சரி! நீ வேண்டுமானால் கடிதம் எழுதிக்கொள். நான் நேரில் போய் ஸாரநாதன் முதலியவர்களைப் பார்த்துவிட்டு வரப்போகிறேன். இப்போதே காரில் போய் வரப்போகிறேன்" என்றான்.

இந்த அதிர்ச்சியான வார்த்தையால் இந்திராவின் தேகம் குலுங்கியது. அவன் எங்கே வந்துவிடுவானோ என்கிற பயத்தினால் தான் வேறு தந்திரமாகப் பேசியும், தானே கிளம்புவதாகச் சொல்லியதும் பதில் சொல்லமுடியாது தவித்தாள். நேரிடையாக வேண்டாம் என்று சொல்லவும் பயந்தாள். முதலில் வரவில்லை என்று கூறிவிட்டு இப்போது வருகிறேன் என்றால் சந்தேகத்திற்கு இடமுண்டாகும். ஆகையால் எந்த வழியும் செல்லமுடியாது தம்பித்தாள்.

"சரி. போய் வாருங்கள். நான் மிகவும் கேட்டதாகச் சொல்லுங்கள்...வென்னீர் தயாராயிருக்கிறது. ஸ்நானத்திற்குப் போகலாம்" என்று கூறி அவனை அனுப்பிவிட்டு நேரே கார் ஷெட்டுக்கு

ஓடி, "இதுதான் சரியான யோசனை" என்று தீர்மானித்துக் கொண்டு காரின் அருகில் போனாள்.

சந்திராவைப்போல் தைரியமாகத் தானே காரை ஓட்டுவது இல்லையென்றி காரை ஓட்டுவதற்கான வழிமட்டும் தெரியுமாதலால் காரில் முக்யமான ஒரு நட்டைக் கழற்றி கார் போகாதபடி செய்துவிட்டு ஒருவரும் அறியாதபடி உள்ளே வந்தாள்.

சேகர் போஜனத்தை முடித்துக்கொண்டு பிரயாணச் சித்த மாக வந்தான். ட்ரைவர் எத்தனை பிரயாசைப்பட்டும் கார் கிளம் பவே இல்லை. "சார்! கார் கெட்டுவிட்டது. முக்யமான விசை ஒடிந் திருக்கிறது. கம்பெனிக்கு அனுப்பித்தான் ரிப்பேர் செய்யவேண் டும்" என்று ஒருமணி காலத்திற்குப் பிறகு தன் அபிப்ராயத்தைத் தெரிவித்தான்.

சேகருக்கு அசாத்ய கோபம் வந்தது. "கார் ரிப்பேர் செய்யவேண்டுமென்று முன்பே பார்க்கவில்லையா! சமயத்திற்கு இப்படித்தான் கழுத்தறுப்பதா! சரி! போய் உடனே ஒரு டாக்ஸி கார் கொண்டு வா!" என்று உத்திரவிட்டான்.

இந்திராவின் வயிற்றில் மீண்டும் பகீர் என்றது. "டாக்ஸியா! எதற்கு?...50, 60 பணம் கேட்பானே! அப்படியாவது செலவு செய்துகொண்டுபோய் உடனே திரும்புவதில் என்ன லாபம். ஒரு நிமிடங்கூட தாமதிக்க நேரமே இல்லை. நாளை ஊருக்குப் போக வேண்டும். மத்தியில் ஒரு மாதம் லீவு வாங்கிக்கொண்டு வந்தா லாயிற்று. இன்று ஷாப்புக்குப் போய் சில சாமான்கள் வாங்க வேண்டும். அதற்குப் போய் வரலாம்" என்றாள்.

சேகருக்கு மிகவும் கோபம் வந்தது. 'நீ சொல்வது கொஞ்சங் கூட நன்றாயில்லை. நீ சந்திராவைப் பார்க்காமல் ஊருக்குப்போனால் அவள் என்ன நினைப்பாள். அல்லது உன் பெற்றோர்கள்தான் என்ன நினைப்பார்கள். டாக்ஸி வைத்துக்கொண்டாவது கட்டாயம் போய்தானாகவேண்டும். அவளுடைய அன்புக்குப் பிரதி அன்பு காட்டக்கூட உனக்குத் தெரியவில்லையானால் எனக்கு வெட்கமா யிருக்கிறது" என்று அதட்டியதுபோல் சொல்லிய சமயம், அமிருத வல்லியம்மாள் இதைக் கேட்டுக்கொண்டே வந்து "ஆமாம். நானும் அப்படித்தான் நினைத்தேன். நீ அவளைப் பார்க்காதுபோனால் மிகவும் ஏளனமாகிவிடும். அவள்மீது உனக்கு என்ன கோபமோ! அதையும் சொல்லாமல் பரதேசிக் குழந்தையை, உன்மீது உயிராயிருக்கும் உத் தமக் குழந்தையை நீ வெறுப்பது கொஞ்சங்கூட நன்றாயில்லை. நான் நினைப்பதுபோலவே உன் கணவரும் நினைப்பது சகஜமே! காரணத்தை பெற்ற தாயாகிய என்னிடம்தான் சொல்லவில்லை. உன் கணவரிடங்கூடவா சொல்லாமலிருக்கிறாய்! இது கொஞ்சங் கூட நன்றாயில்லை."

என்று கூறும்போது தபால்காரன் 'அமிருதவல்லியம்மாளுக்கு தபால்' என்று ஒரு கவரைக் கொடுத்தான். அமிருதவல்லி அதை

ஆவலுடன் வாங்கினாள். சந்திராவின் கையெழுத்துத்தான் என்று தெரிந்ததும் சந்தோஷத்தால் இதயம் மகிழ்ந்தது. உடனே படிக்க வாரம்பித்தாள்.

"என்னுருயிர் அன்னையின் திருவடிகளில் சந்திரா அனேக நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்தைத் தெரியப்படுத்தவும். அத்திம்பேரை மாற்றிவிட்டதால் அக்காவும் அத்திம்பேரும் வட இந்தியாவுக்குப் போகிறார்கள் என்று நீங்கள் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. அக்கா வெகு தூரம் போவது உங்களுக்கு மிகவும் கஷ்டமாகவிருக்கும். அக்காவும் அத்திம்பேரும் க்ஷேமமாக இருக்கவேண்டுமென்றும், வெகு சீக்கிரத்திலேயே உங்களைப் பாட்டியாக்கவேண்டுமென்றும் நான் பகவானை இடைவிடாது பிரார்த்தனை செய்கிறேன். அக்காவுக்கும் அத்திம்பேருக்கும் எனது மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவிப்பதோடு அவர்களுக்கு எனது ஞாபகார்த்தமாய் ஒரு மோட்டார் கார் வாங்கி பிரஸெண்டாகக் கொடுத்தனுப்புங்கள். இதை எக்காரணம்பற்றியும் நிறுத்தவேண்டாம். வட-நாட்டில் அவர்களுக்கு கார் மிகவும் உபயோகமாக இருக்கும். 3000 ரூபாயில் ஒரு கார் நம்ம வீட்டிற்கு அனுப்பும்படிக்கு நான் கம்பெனிக்கு எழுதியிருக்கிறேன். எனது அன்பின் அர்ப்பணமாக அக்காவுக்குக்கொடுக்கவும். எனக்குஉடம்பு தேவலை. அப்பாவுக்கு எனது நமஸ்காரம். நீ ஏன் ஊருக்குப் போனாய் என்றும் காரணம் தெரியவில்லை என்றும் எழுதியிருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. நான் அங்கிருந்தால் அக்கா சதா என்னுடன் கூடவே இருப்பதில் அத்திம்பேருடன் இருக்கும் நேரத்தை நான் பகிர்ந்துகொள்வேன். அவர்கள் சுகமாக ஒன்றுயிருப்பதற்காகவே நான் வந்தேன். இதுதான் காரணம்.

இங்ஙனம்,
சந்திரா."

இதைப் படிக்கும்போதே அமிருதவல்லியம்மாளின் கண்ணில் நீர் ததும்பியது. சந்திராவின் குண விசேஷத்தையும் அவளுடைய தயாளத்தன்மையையும், சகோதரியினிடம் அவளுக்குள்ள எல்லை கடந்த வாத்ஸல்யத்தையும் கண்டு பூரித்தவளாய், "இந்திரா! அந்த கபடற்றக் குழந்தையை நீ பார்க்காதுபோவதற்குத் துணிந்தாயே! இதோ! அவளுடைய கடிதத்தைப் பார்" என்று கடிதத்தை இந்திராவிடம் கொடுத்தாள்.

இந்திராவிடமிருந்து சேகர் வாங்கிப் பார்த்தான். சந்திராவின் கடிதம் அப்பழுக்கற்ற அன்புடன் பிரகாசிப்பதைக்கண்டும் இந்திராவிடம் அவளுக்குள்ள அபாரமான நேசத்தைக் கண்டும் சேகர் வியந்தான். இந்திராவின் கல்லினும் கடின இதயத்தையும் இக்கடிதம் ஒரு குழப்பு குழப்பிவிட்டது.

"என்ன! எனக்குக் கார் ப்ரெஸெண்டா! 3000 ரூபாயிலா!.... எனக்கா! அவருக்கா!...சீச்சீ!...அக்காவுக்கு என்று கொட்டை கொட்டையாய் எழுதியிருக்கிறாளே...என்ன பொறாமை...என்ன சாந்தம்!....என்று வியக்கும் சமயம் 'பும்...பும்' என்று ஹாரனடித்துக்கொண்டு கம்பெனியிலிருந்து புதிய கார் வெகு அழகான மாடலில் வந்து நின்றதைக் கண்டு எல்லோருக்கும் உண்டாகிய பிரமிப்புக்கு எல்லையே இல்லை.

சந்திராவைத் தனக்குச் சத்ருவாக நினைத்தபோதிலும் அவளுடைய அன்பின் அடையாளமான காரைக்கண்டதும் அவளறியாத சந்தோஷமும் ஆசையும் உண்டாகி, விரோதியின் பணம் மட்டும் வெகு இனிப்பாகவே தோன்றியது. காரை விடுவதற்கும் மனமில்லை. ஏனெனில் தன் கணவனும் உடனே கார் வாங்கமுடியாது. தகப்பனாருக்கும் இவளுக்குக் கார் வாங்கிக் கொடுக்கும் சக்தியில்லை. சந்திராவின் பணத்திலிருந்துதான் வாங்கவேண்டும். வெளியூரில் தடபுடலாகக் காருடன் சென்றால் எத்தனையோ மதிப்பாயும் உயர்வாயுமிருக்கும். ஆதலால் விட மனமில்லை.

ஆனால், குற்றமுள்ள நெஞ்சின் குருகுருப்புமட்டும் லேசில் போய்விடுமா? தன் கணவனைச் சந்தோஷப்படுத்துவதற்குத் தன் அடையாளமாக இதை வாங்கியனுப்பியிருக்கிறாளோ என்னவோ! என்கிற விஷ எண்ணமும் ஊடே நெஞ்சில் தோன்றியது. ஆனால் என்ன! அவள்தான் கண்மறைவாக இருக்கும்போது கார் என்ன செய்துவிடும், என்கிற பலவிதமான யோசனைகளில் குழம்பிக் கிடந்தும் இறுதியில் ஆசைதான் ஜெயித்தது.

சந்திராவின் தயாளமும் உத்தம குணமும் அமிருதவல்லியம்மாளின் கண்களில் ஆனந்தபாஷ்பத்தைச் சுறக்கச்செய்தன. இந்திராவின் கண்களில் சந்தேகம், வஞ்சனை, ஆசை, குழப்பம் முதலிய கலவரங்களைப் பளிச்சென்று பார்வையே எடுத்துக் காட்டியது. சேகர் கண்களோ, தன் மனைவியின்மீதுள்ள சந்தேகம் அதிகரித்த பார்வையும், சந்திராவின் உவமையில்லாத வாஞ்சையையும் எண்ணி வியப்புக்கடலாடின. "இந்திரா! நீயாக சந்திராவைப் பார்க்க மனம் வராதிருந்தும் கடவுள் அவளுடைய உதவியையே உனக்கு அனுப்பியிருக்கிறார். இதே காரில் போய்வரலாம் வருகிறாயா!" என்றான்.

இந்திராவுக்குச் சற்றும் சம்மதமே இல்லையாதலால் மறுத்து விட்டதோடு அவனையும் தடுத்துத் தன் எண்ணத்தையே சாதித்துக் கொண்டாள். இச் செய்கையைக் கண்டு நரஸிம்மன்கூட வியப்புற்றார் என்றால் வேறு சொல்வதற்கு என்ன இருக்கிறது?

---

வை. மு. கோ. 58-வது நாவல்

ஞானதீபம்

விலை ரூ. அ 1 12.

ஸாரநாதனின் அபிப்பிராயம் அவன் வார்த்தையிலிருந்து நன்கு தெரிந்தபிறகு சந்திராவுக்கு அங்கிருப்பதற்கே பிடிக்காது வேதனையாகவே இருந்தது. தன் தாயாரின் விருப்பம் ஸாரநாதனுக்கே தன்னைக் கொடுக்கவேண்டுமென்று இருக்குமாயின் என்ன செய்வது? என்கிற பெருத்த கவலை ஒன்று புகுந்துவிட்டதால் பின்னும் மெலிந்துபோனாள்.

ஸாரநாதனிடம் அதற்குப்பிறகு அதிகமாகப் பேசுவதை நிறுத்திக்கொண்டாள். எப்போது இங்கிருந்து போவதற்குச் சமயம் வரும் என்று அவள் மனது ஆவலாய் எதிர்பார்த்தது. இந்திரா ஊருக்குப் போகும் கடிதம் வந்ததும் "இனி நான் இங்கிருந்து போய்விடலாம். பகவான் பரம கிருபை செய்து நமக்காகவே பங்களாவுக்குள் எழுந்தருளியிருப்பதால் அவருடைய சன்னிதானத்தில் நம் காலத்தைக்கடத்தலாம்" என்றுஒரு முடிவு செய்துகொண்டாள். தானாக இங்கு வந்திருப்பதால் தானாகத்தான் போகவேண்டும். கடிதம் வருமோ! வராதோ!" என்ற கவலை வேறு உண்டாகியது.

சந்திராவின் கவலைக்கு சற்று ஆறுதலளிக்கக்கூடியது பக்கத்து வீட்டு ராஜாயினுடைய சங்கீதமே ஆகும். அன்று காலை முதல் சங்கீதம் கேட்காததால் ராஜாயி ஒருகால் ஊரிலில்லையோ என்று கூட எண்ணினாள். வழக்கம்போல் தோட்டத்துப் பக்கம் போய், "ராஜாயி! ராஜாயி!" என்று கூப்பிட்டாள். ராஜாயி ஒரு துள்ளு துள்ளியவாறு ஓடி வந்தாள்.

சந்தி:—என்ன ராஜாயி! இன்று உன் சங்கீதம் கேட்காது என் மனம் இருப்பே கொள்ளவில்லையே! ஏன் காலை முதல் பாடவேயில்லை? ஒரு வேளை ஊருக்குப் போய்விட்டாயோ என்றல்லவா எண்ணினேன். ஏன் பாடவில்லை?

ராஜா:—ஆமாம்; நேற்று ஊருக்குத்தான் போயிருந்தோம். இங்கு சமீபத்தில் 10 மைல் தூரத்தில் ஒரு கோயில் இருக்கிறது. அங்கு பெரிய உத்ஸவம் சேவிக்கப் போயிருந்தேன். இன்று காலையில்தான் திரும்பி வந்தேன். வரும்போது வழியில் யாரோ ஒருவன் எக்கச்சக்கமாக காரில் அகப்பட்டுக்கொண்டான்.

சந்தி:—ஐயையோ! காரிலா அகப்பட்டுக்கொண்டான்! செத்துப்போய்விட்டானோ!...

ராஜா:—நல்ல வேளையாக எங்கள் ட்ரைவர் பலமான பிரேக்கு போட்டு நிறுத்தியதில் உயிருக்கு ஆபத்தில்லை. தலையிலும் உடம்பிலும் அடிகள்தான் பட்டிருக்கின்றன. அவன் யாரோ, என்னவோ தெரியவில்லை. அப்படியே ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போய் கட்டுகள் கட்டி எங்கள் வீட்டிலேயே கொண்டுவிட்டிருக்கிறோம். அவனுக்கு மயக்கமாகவே இருப்பதால் அவனிடம் பேசவே இல்லை. "சற்று தெளிந்ததும் அவன் விலாசம் தெரிந்

தால் வீட்டில் கொண்டுவிடலாம் அவனுக்கு தலைவேதனையாக இருக்குமோ என்னவோ, இன்று பாடவேண்டாம்" என்றார். எங்கப்பா; அதனால் பாடவில்லை.

சந்:—(சற்று வியப்புடன் பார்த்தபடியே) ராஜாயி! நான் கேட்கிறேன் என்று கோபித்துக்கொள்ளாதே! நீங்கள் தாசி குலமாயிற்றே! உங்கப்பா சொன்னார் என்கிறாயே! உனக்கு அப்பா யாரு?...

ராஜா:—இந்த கேள்விக்கு நீ தயங்கவேண்டுமா! தாராளமாகக் கேளும்மா! எங்கள் குலம் அடியோடு பாழாகிவிட்ட நிலைமையில் இத்தகைய ஆபாஸக் குப்பையாகிவிட்டது. எங்கள் ஜாதிக்கே ஒரு திலகமாகப் பிறந்துள்ள ஸ்ரீமதி நிர்மலாதேவியை உங்களுக்குத் தெரியுமா!

சந்:—நிர்மலாவா!...எனக்கு தாசி குலத்தில் யாரையுமே தெரியாது. தாசி குலத்தவரோடு பேசினால்கூட எங்கள் வீட்டில் திட்டுவார்கள். நான் இப்போது உன்னுடன் பேசுவதுகூட எங்க சின்னம்மாவுக்குக் கோபந்தான். ஆனால் உன்னுடைய விலை மதிப்பற்ற சங்கீதம் என்னைப் பரவசப்படுத்திவிடுகிறது...அதிருக்கட்டும். நிர்மலாவுக்கு என்ன?

ராஜா:—அவள் எங்கள் ஜாதியின் ஊழல்களை வேரறுக்கப் பிறந்த உத்தமி. அவள் இதற்காகப் பட்ட பாடும் அடைந்த துன்பமும் கூறமுடியாது. ஒரு பெரிய காரியத்தைச் சாதிப்பதென்றால் லேசானதா! அவளுடைய சொந்த மனிதர்களே அவளுக்கு விஷத்தைக் கொடுத்துக் கொலை செய்யப்பார்த்தார்கள். சகலவித ஆபத்துகளுக்கும் அவள் அஞ்சவில்லை. எங்கள் குலத்தின் ஆபாஸத்தைக் களைந்து சீரிய ஒழுக்கத்தை நிலைநாட்டிய உத்தமியின் கக்ஷியில் பிறகு அனேகர் சேர்ந்துவிட்டார்கள். என் தாயாரும் அந்தக் கக்ஷியில் சேர்ந்து நல்ல உயர்ந்த புருஷனை மணந்துகொண்டு, உங்களைப் போன்ற குடும்பத்துப் பாணியிலேயே நாங்கள் இருக்கிறோம். என் தகப்பனார் பெரிய வக்கீல். அவருடைய சம்பாத்யத்தில் நாங்கள் மானமாக ஜீவனம் செய்கிறோம். எனக்கும் நல்ல வரனைப் பார்க்கிறார்கள். அவர் இஷ்டப்பட்டால் நான் சங்கீதச் கச்சேரி செய்வேன்; இல்லையேல் உங்களைப் போலவே இருப்பேன்.

சந்:—அப்படியா! கேட்க மிகவும் ஆனந்தமாகவிருக்கிறதே. தற்போது அந்த நிர்மலாதேவி எங்கிருக்கிறார்கள்? அவருடைய சேவை இன்னும் பலனைக் கொடுத்து வருகிறதா! அத்தகையோரைப் பார்க்கவேணும்போலிருக்கிறதே!—என்றாள்.

உடனே ராஜாயி குதூகலத்துடன், "சந்திரா! அந்தம்மாளை நாங்கள் எங்கள் குலதெய்வமாகவே நினைக்கிறோம். என் ரூமில் அவர்களுடைய படத்தை மாட்டிப் பூஜை செய்கிறேன் தெரியுமா! நீ என் ரூமுக்கு வாயேன். படத்தைப் பார்க்கலாம்" என்றாள்.

சந்திராவுக்குப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையிருந்ததால் ராஜாயியுடன் அவள் வீட்டிற்குச் சென்றாள். "தாசி வீடு என்றால்

எப்படியிருக்குமோ? யார் யார் இருப்பார்களோ! ரூமில் என்ன ஆபாஸப் படங்கள் மாட்டியிருக்குமோ!" என்றெல்லாம் சந்திரா எண்ணினள். இங்கு வந்தபிறகு ரூமில் பக்தி ரஸம் நிறைந்த காக்ஷியைக் கண்டதும் கூறத் திறமற்ற வியப்பு உண்டாகியது. "வீணை கூட இருக்கிறதா! நீ வீணையும் வாசிப்பாயா?" என்ருள்.

ராஜா:—நான் சுமாராக வாசிப்பேன். என் சகோதரி ஒருத்தி இருந்தாள். அவளுக்கு வாய்ப்பாட்டு வராது. வீணைக் கச்சேரி கூடச் செய்யும் திறமை பெற்றிருந்தாள். அவளுடைய வீணை வாசிப்பைக் கேட்டு பெரிய பெரிய வித்வான்கள்கூட பிரமித்துப் போனர்கள். அத்தனை சிறு வயதில் அவள் ஸரஸ்வதியின் அம்சம் என்று புகழ் பெற்ருள். ஆனல்...

சந்தி:—ஏன்?...ஆனல் என்ன? கணவர் பாடக்கூடாதென்று தடையுத்திரவு போட்டுவிட்டாரா?

ராஜா:—அதுதான் உலகத்தில் உள்ள சட்டமாயிற்றே! பகவானே தடையுத்தரவு போட்டு அவளை எங்களிடமிருந்து பிரித்து எமனிடம் அனுப்பிவிட்டார்.

சந்தி:—ஆ...அடாடா! இறந்துவிட்டாளா! ஐயோ! மிக்க விசனமாயிருக்கிறதே...

ராஜா:—அதோடு என் பெற்ருேர்களின் சந்தோஷமே செத்து விட்டது. என் தாயார் சுமார் இரண்டு வருஷகாலம் படுக்கையை விட்டு எழுந்திருக்கவே இல்லை. பிறகு என் பொருட்டுச் சற்று தேறி வருகிருள். அவள் வெகு அழகாக இருப்பாள். உம். அதொரு சொப்பன காலம். இதுதான் என் சகோதரியின் படம். இதுதான் நிர்மலாதேவியின் படம்.

இந்தம்மாள்தான் எங்கள் குலதெய்வம். ஆபாஸத்திற்கெல்லாம் இருப்பிடமாகி, பாபமூட்டையைத் தியங்காது சுமப்பதையே பேரின்பமாகக் கருதிவந்த தாசிகுலத்தின் ஊழல்களை அடியோடு கொளுத்தி அவர்களையும் மனிதப்பிறவியின் தத்துவத்தை அறியும்படிச் செய்த உத்தமி இவர். இவர் இப்போதும் தமது சேவையைச் செய்துவருகிருர்.

சந்:—அடாடா! என்ன அழகு! என்ன கம்பீரம்! கண்களில் தான் எத்தனை ஆழமான வீரமும் கருணையும் வைராக்யமும் கலந்து சொட்டுகிறது. மகராஜி. புனிதமான காரியத்தைச் செய்தாள் என்று இவளை உலகம் என்றென்றும் கொண்டாடும். ஒரு காரியத்தைச் சாதிக்கும் சக்தியும் தைரியமும் வேண்டாமா!....சரி....எங்க சின்னம்மாள் தேடிக்கொண்டு வந்துவிடுவார்கள். நீ ஒரே ஒரு பாட்டு பாடு. நான் போய்விடுகிறேன்.

குறிப்பு:—"ஜீவியச்சுழல்" என்கிற நாவலைப் படித்து இன்புறுங்கள். அதில் ஸ்ரீமதி நிர்மலாதேவியின் அதியற்புதமான சரிதையின் ஸாரத்தைக் கண்டு களிக்கலாம். விலை ரூ. 1-4-0.



ராஜா:—நான் தான் காரணம் முதலிலேயே சொன்னேனே! இப்படி வா...என்று சந்திராவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய், "அதோ பாரு. அடிபட்டவன்படுத்திருக்கிறான். பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்தான் என் தகப்பனார். இன்னும்கூட மயக்கம் தெளியவில்லைபோலிருக்கிறது. பாவம்! பரம ஏழைபோல் இருக்கிறது....

என்று ஏதேதோ சொல்லிக்கொண்டுபோவது சந்திராவின் காதில் ஒன்றுமே கேட்கவில்லை. கட்டிலில் கிடத்தப்பட்டிருப்பவன் ஸ்ரீதரன் என்று தெரிந்தவுடனே அவள் இதய ஓட்டம் அதிகரித்து அப்படியே தம்பித்துப்போனாள். "ஐயையோ!" என்று வாய்க்

குள் அலற்றுகிறுள். "இவருக்கா இத்தகைய ஆபத்து! ஓடிப்போய் "ஸ்ரீதர்!" என்று கூப்பிடலாமா!" என்று மனது பதைக்கிறது.

"இடமோ தாகிவிடு. நான் அம்மாதிரி செய்வதால் விபரீதமாக வன்றேமுடியும். ஹா! சோதனேயே! சோதனேயே!" என்று குமுறு கிறுள். இதற்குள் கல்யாணியம்மாள், "சந்திரா! சந்திரா!" என்று கூப்பிடும் குரல் கேட்டபிறகு பழய நினேவுவந்தது... அலறிளுள்.

ராஜா:—என்ன சந்திரா! ஏதோமாதிரி விழிக்கிருயே.... இவரை உனக்குத் தெரியுமா!...

சந்திராவுக்கு தர்ம சங்கடமாகிவிட்டது. தெரியும் என்ருலும் ஆபத்து; தெரியாதென்பதற்கோ மனது துடிக்கின்றது...மெல்ல சமாளித்துக்கொண்டு, "அப்பப்பா!...காரில் அகப்படும்போது எப்படித்தான் வலித்திருக்கும் என்று நினேத்தேன். ஏதோமாதிரி தேகம் சிலிர்த்துவிட்டது. பாவம்...விதி செய்யும் கூத்து. அதோ சித்திகூட இங்கு வந்துவிடுவாள்போலிருக்கிறது. நான் போய்



வருகிறேன். நோயாளியைப் பார்த்துக்கொள்ளு" என்று கூறிய வாறு போக மனமின்றிப் பிரிந்து ஓட்டமாக ஓடிவந்தாள்.

தோட்டத்தில் எதிரில் வரும் கல்யாணியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கின்றது. "என்ன சந்திரா! தேவடியாளுடன் பேசுவதோடு நில்லாமல் வீட்டிற்குக்கூடப் போகவாரம்பித்தாயா! இது சுத்தமாக நன்றாயில்லை. அக்காவுக்குத் தெரிந்தால் என்னைத் தானே கோபிப்பாள். நம் குலமெங்கே, அவர்கள் குலமெங்கே? அவர்களிடம் பேசுவதே இளைப்பம். வீட்டிற்குப் போனால் ஊரார் நம்மை மிகவும் கேவலமாகவன்றோ மதிப்பார்கள்" என்று கூறிய படியே நடந்தாள்.

இந்த வார்த்தைகள் எங்கே ராஜாயியின் காதில் விழுந்து விடுமோ என்கிற திகில் வாட்டுகிறது. ஸ்ரீதரனுக்கு ஒன்றுமில்லா திருக்கவேண்டுமென்று பயம் நடுக்குகிறது. இத்தகைய போராட்டத்தில் கல்யாணியம்மாளுக்குப் பதிலே சொல்லாது வந்து சோபாவில் சாய்ந்தாள். அவளது இதயக் கொந்தளிப்பின் வேகத்தை கல்யாணி அறியமுடியுமா! அறிவதற்குத்தான் மார்க்கமேது?

சந்:—சித்தியம்மா! நீங்கள் நினைப்பதுபோல் அவர்கள் ஊழல் குப்பையான தாசியல்ல. நம்மைப்போல் நல்ல குடும்பத்திலிருப்பவர்கள், கல்யாணம் செய்துகொண்டு தம்பதிகளாய் வாழுபவர்கள். அதனால்தான் நான் பேசுகிறேன். இதில் இளைப்பமென்ன? கேவலமான தாசிகளாயிருந்தால் நான் பேசக்கூடமாட்டேன் சின்னம்மா!—என்று ஒரு நாளும் எதிரில் பேசியறியாதவள் இன்று இப்படிச் சொன்னதால் கல்யாணியம்மாளுக்குச் சற்று கோபமே வந்தது. அவளுக்குப் பதில் பேசாது போய்விட்டாள்.

சந்திராவின் மனத்தில் செய்யும் சங்கடத்திற்குமுன்பு இது ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. தான் இனி எப்போதுபார்ப்போம் பார்ப்போம் என்று ஏங்கித் தவித்த இன்பப் பொருள் கண்ணெதிரில் வெகு சுலபமாகக் கிடைத்திருக்கையில் எப்படியாவது அவனைக் கண்டு பேசவேண்டும் என்கிற பேராவல் அவள் இதயத்தில் வேரூன்றி, அதே எண்ணத்தில் மனது லயித்து அதற்கு எப்படி வழி செய்யலாம் என்ற யோசனையிலேயே அவள் நினைவு ஆழ்ந்தது.

## 25

இரண்டு குமாரத்திகளுடனும் இன்பமாகக் காலந்தள்ளிய அமிருதவல்லிக்கும் அவள் கணவருக்கும் இந்திராவும் ஊருக்குச் சென்ற பிறகு மனது இருப்பே கொள்ளவில்லை. இத்தனை பெரிய வீட்டில் அவர்கள் இருப்பதற்கு பயமாகவே தோன்றியதால் சந்திராவை உடனே வரும்படியாகக் கடிதம் எழுதினர்கள்.

நரஸிம்மனுக்கு மட்டும் பங்களாவிலுள்ள ஏதோ கோளாறு தான் பெண்கள் இருவரையும் பிரித்துவிட்டது; தினம் துர்ச்சொப்பனங்கள் வருகின்றன. தானாகவே உடல் பலவீனப்படுகிறது என்கிற எண்ணங்கள் மேலும் மேலும் வளர்கின்றனவேயன்றி குறையவில்லை. அமிருதவல்லியம்மாளுக்கு வீட்டுச் சந்தேகம் எதுவும் தோன்றவில்லை யெனினும் அடிக்கடி சுமங்கலிகள் உலாவுவது போலும், மெட்டும் பாதஸரமும் குலுங்க நடப்பதுபோலும் ஒரு தோற்றம் உண்டாகியது. ஆனால் அவள் பரம பக்தியுள்ளவளாதலால் அதைக் கண்டு பயப்படாமல் "சர்வம் ஸ்ரீ கிருஷ்ண மயம். ஸ்ரீ கிருஷ்ணனுடைய மாயலீலை. அவன் ஜகன்மோகனவதாரம் எடுத்தவனாதலால் அந்தச் சாயல்தான் இந்த தோற்றம்" என்று பக்தியிலேயே மனத்தைச் செப்பனிட்டுக் கொண்டாள்.

மக்கள் மீதுள்ள பாசத்தைமட்டும் நிவர்த்திக்கமுடியாமல் சந்திராவை வரும்படி எழுதினாள். அவளுக்கு இந்திராவைப் பிரிந்ததுகூட சிரமமாகத் தோன்றவில்லை. சந்திராவின் வரவுக்கே எதிர் பார்த்திருந்தாள். இந்திராவின் நடத்தையில் பெற்ற தாயாகிய அவளுக்கே பலமான சந்தேகம் உதித்ததால் அந்த ரகஸியத்தை அறிய பேராவல் கொண்டாள். அதோடு சந்திராவின் தாயாருக்கு வருஷ திவசம் இன்னும் ஒரு வாரத்தில் வருவதால் கட்டாயம் அதற்கு அவள் வரவேண்டும். அதையும் உத்தேசித்தே எழுதினாள்.

மனக் குழப்பத்துடன் தவிக்கும் சந்திராவின் கண்கள் ராஜாயி வீட்டின் மாடி ஜன்னலின் பக்கமே பார்க்கிறது. கால்கள் அந்த வீட்டிற்குப் போவதற்கே விரைந்து பறக்கின்றன. மனமோ, கட்டிலில் கிடத்தப்பட்டுள்ள ஸ்ரீதரனிடம் தாவிச் செல்கிறது. ஆனால் சரீரம் பிறருடைய பந்தத்தில் கட்டுப்பட்டு சிறையிட்டதற்கொப்ப கிடக்கின்றது.

அன்று என்ன காரணத்தினலோ, கல்யாணியம்மாள் தினம் போகும் கோயிலுக்குக்கூட போகவில்லை. சந்திராவின் பார்வையில் பட்டுக்கொண்டே உலாவி வந்தாள். அதோடு "அவர்கள் குல ஸ்திரீகளைப்போல நடந்தாலும் தேவடியாள், தேவடியாள் தான்! அங்கு போவது பிசகு" என்று கண்டிப்பாயும், உறுதியாயும் வேறு கூறியது, சந்திராவின் இதயத்தில் வாள்கொண்டறுக்கிறது.

"என்ன உலகம்! என்ன அநியாயம்! சூழலில் விழுந்துழலும் தேவடியாள் நல்ல முறையில் அறிவுடன் ஒழுகினால்கூட அவர்களை லக்ஷியம் செய்யக்கூடாது. நல்ல உயர்ந்தகுடும்பத்தில் பிறந்தவர்கள் எத்தகைய அக்ரமத்தைச் செய்தாலும் அதற்குக் கேள்வி முறையே இல்லை போலும். நல்ல பணக்காரர்களாயிருந்தால் அவர்கள் பகிரங்கமாக அக்ரமத்தைச் செய்தாலும் அவர்கள் வீட்டிற்குப் போவதற்கு அஞ்சிகையே இல்லை. அதையோர் உயர்வாகவும் பெருமையாகவும்கூடச் சில மூடாத்மாக்கள் நினைக்கிறார்கள். குலத்தில் தாழ்ந்தவர்களாகவிருப்பினும் உயர்ந்த முறையில் வாழ்க்கை நடத்

தியபோதிலும் அதுவும் இழிவா! என்ன சமூகம்! என்ன நியாயம்!'' என்று சந்திராவின் உள்ளம் கொதிக்கின்றது. ஸ்ரீதரனின் நினைவு ஒருபுறம் பிடித்து இழுக்கிறது.

சித்தியும், சித்தப்பாவும் ஸ்ரீதரனைப் பேசிய பேச்சு இதயம் பிளந்துவிடும்போலிருந்தது. அத்தகைய மனிதன் தனக்குப் பரிச்சயம் என்று எப்படிச் சொல்லமுடியும்? அதோடு தன்னைக் கேவலமாகவன்றோ பேசி பட்டங்கள் கட்டிவிடுவார்கள் என்று நினைக்கும்போது அவள் சரீரமே பற்றி எரிவதுபோல் தோன்றியது. தத்தளிக்கும் நிலைமையில் புரண்டு புரண்டு படுத்திருந்தாள்.

சந்திராவுக்கு இரண்டு கவர்கள் தபாலில் வந்ததை ஸாரநாதனே கொண்டு கொடுத்தான். சந்திரா ஆவலுடன் வாங்கினாள். ''அது என்னகடிதம்'' என்று பார்ப்பதற்காகவே அவன் காத்திருந்தான்.

ஒரு கடிதம் தன் தாயாரிடமிருந்து வந்திருப்பதை அறிந்தாள். மற்றொன்றைப் பார்த்தால் தன் அத்திம்பேரின் கையெழுத்துபோல் தோன்றியதால் தூக்கிவாரிப் போட்டது. சற்று யோசித்துப் பின் ''இந்திராவிடமிருந்தும் அம்மாவிடமிருந்தும் வந்திருக்கிறது'' என்று உரத்துக்கூறியபடியே அம்மாவின் கடிதத்தைப்படிக்கஆரம்பித்தாள்.

''என் கண்மணி சந்திராவுக்கு சர்வமங்களமும் உண்டாவதாக.

உபய க்ஷேமங்கள்... இந்திரா இருந்த வரையில் எப்படியோ நான் காலத்தைத் தள்ளினேன். அதற்குள் உனக்கும் சற்று உடம்பு குணமாகட்டும் என்று நினைத்துப் பேசாதிருந்தேன். அவள் இருக்கும்போதே உன் பிரிவு என்னை வதைத்தது. இப்போது என்னால் இருக்கவே முடியவில்லை. நீ இல்லாது உன் பிதாவைப் பார்க்கவே முடியவில்லை. அவருக்கு ஏற்கெனவே உள்ள கிலி மாறவே இல்லை. நீ கூட இருந்தால் பாட்டு, கதை முதலியவற்றால் அவருக்குச் சற்று பொழுது போக்கை உண்டாக்கலாம். நீ இப்போதும் சந்தோஷமில்லாமலேயே இருப்பதாக ஸாரநாதன் எழுதியிருக்கிறான். எனக்கு அதே கவலையாயிருக்கிறது. உன்னைப் பார்த்தால்தான் என் மனது சாந்தியடையும். நீ எப்படியும் இன்னும் ஒரு வாரத்தில் கட்டாயம் வரவேண்டும்; அடுத்த வெள்ளிக்கிழமை உன் தாயாரின் திவசம், ஆகையால் நீ நாளையே வந்துவிடு. ஸாரநாதனாவது சித்தப்பாவாவது உன்னைக் கொண்டுவிடும்படி எழுதியிருக்கிறேன்.

இங்ஙனம்,

உன் அம்மா''

183072

இதைப் படித்ததும் மற்றொரு கடிதத்தை உடைக்கும் வரையில் இந்திராவின் கடிதம்தான் என்று நம்பியிருந்தாள். கடிதத்தின் எழுத்து முற்றும் தன் அத்திம்பேருடையது என்பதைப் பார்த்ததும் தூக்கிவாரிப்போட்டது. தன் அறைக் கதவைச் சாத்திக்கொண்டு கடிதத்தைப் படிக்கவாம்பித்தாள்.

அக் 1942 **விஷய அட்டவணை** சித்திரபானு புரட்

மலர் 19. இதழ் 10.


| | | |
|---|---|---|
| கீ. அழகு வளரும் தோட்டில் | பி. ஸ்ரீ. | 1 |
| வெள்ளித்திரை-நந்தனர் | வை. மு. கோ. | 5 |
| புரட்டாசியின் புனிதத்தன்மை | "குகப்ரியை" | 6 |
| பாரதநாட்டு திலகங்கள்-ஸ்ரீ. ஜானம்மாள் | வை. மு. கோ. | 9 |
| வாத்ஸல்யம்-59-வது நாவல்(தொடர்ச்சி) | வை. மு. கோ. | 65-96 |


மேலட்டை படம்: ஸ்ரீமதி. ஜானம்மாள்

# 1-10-1942 முதல் சென்னையில்

நமது "மோகினி"யும் "மோகினி" பிரசுரங்கள் யாவும் நமது

**சென்னை ஏஜண்ட் ஸ்ரீ. பி. வி. டி. ஸ்வாமி**

**அவர்களிடம் நமது சென்னை ஆபீஸில் கிடைக்கும்**

**26. தேரடித்தெரு, திருவல்லிக்கேணி. தினசரி 11 முதல் 7 மணி வரை**

சந்தாதாரராகச் சேருவோர் அவரிடமே சந்தா செலுத்தலாம்.

மற்றபடி நேரில் நமது காரியாலயத்திற்கு எழுத விரும்புவோர் வழக்கம்போல் 'சிங்கப்பெருமாள்கோயில்' விலாசத்திற்கு எழுதவும்.

## சந்தாநேயர்கள் கவனிக்கவும்

நமது காரியாலயம் தற்சமயம் கிராமத்திலிருப்பது நேயர்கள் அறிந்த விஷயம்; கிராமத்திலிருந்து போகும் தபாலும், சஞ்சிகையும் சரி; கிராமத்திற்கு வரும் தபாலும் சரி; ஒருநாள் இரண்டு நாள் தாமதமாகவே கிடைக்கின்றது. ஒவ்வொரு மாதமும் முதல் தேதியே சஞ்சிகை அனுப்பினலும், வழியில் ஏற்படும் சிறிது தாமதத்தையும் தாங்காது சிலர் "இன்னும் சஞ்சிகை வரவில்லையே?" என்று 3, 4 தேதியிலேயே எழுதுகிருர்கள். 10-ந் தேதி வரையில் பார்த்துக்கொண்டு 20-ந் தேதிக்குள் எழுதினல்தான் உடனே வேறென்று அனுப்பப்படும். விலாசம் மாறுவோர் 28-ந் தேதிக்குள் நமக்குத் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. சிலருக்கு எப்படியோ சஞ்சிகை சேராமல் தவறிவிடுவதாகப் புகார் கிடைக்கிறது. அத்தகைய அன்பர்கள், தயவுசெய்து தம் தம் ஊர் போஸ்டாபீஸ்களில்முதலில் கம்ப்ளெய்ன்ட்கொடுத்துப் பிறகு நமக்குத் தெரிவிக்கவும்.

மானேஜர் "ஜகன்மோகினி"


PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMAL KOIL, B. O.

ரூ. 2-8
வைதேகி
பத்மகாந்தன்
ராதாமணி
சாருலோசனா
காதலின் கனி

ரூ. 2
நவநீதகிருஷ்ணன்
☐ ருக்மிணிகாந்தன்
சாமநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1-12
சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
தயாநிதி
ஞானதீபம்

ரூ. 1-8
சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
தோஷ மலர்

ரூ. 1-4
☐ பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
☐ வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரி திலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
☐ புகழ்மாலை
கலாநிலயம்

# மோகினி
அன்பர்களுக்கு
# ஓர் அரிய விருந்து

என்ன வரப்போகிறது?

வைர விழா

## அடுத்த இதழில்
## இதே இடத்தை
கவனியுங்கள்

நினைவிருக்கட்டும்

ரூ. 1
சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணாலயம்

அணா 14
☐ கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணா 12
கதம்பமாலை *

அணா 10
பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணா 8
நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

அணா 6
பக்ஷமாலிகா
சுடர் விளக்கு

அணா 4
☐ மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
☐ அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன் *
உளுத்த இதயம்

ஷை 30 நாவல்களில் ☐ குறிப்பிட்டுள்ளவை தவிர்மீதி எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் வாங்கினால் ரூ30க்கு தரப்படும். ரயில்வே பார்ஸல்மூலம் எங்களது செலவில் அனுப்பப்படும்.

☐ குறிப்பிட்ட புத்தகங்கள் தற்சமயம் கைவசமில்லை. மற்ற புத்தகங்களை ஒரே செட்டாக வாங்கினால் ரூ. 35/-க்கு தரப்படும். ரயில்செலவு இனாம்.
ஷை குறைந்த விலை திட்டம் 31-10-1942 வரை நீடிக்கப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

ஷை 29 நாவல்களில் ☐ குறிப்பிட்டுள்ளவை தவிர்மீதி எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் வாங்கினால் ரூ10க்கு தரப்படும். ரயில்வே பார்ஸல்மூலம் எங்களது செலவில் அனுப்பப்படும்.